பக்கங்கள்:-பத்து

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி 24 | ஞாயிற்றுக்கிழமை | (08.08.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 233

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310, 021 2227555, 021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## தமிழ்மொழிப் பற்றாளரை தலைவர் பிரபா கௌரவிப்பு



(கிளிநொச்சி)

ஜேர்மனியில் புலம் பெயர்ந்துவாழும் ஈழத் தமிழர் மத்தியில் தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் தாய்மொழிப் பற்றை உருவாக்கியமைக்காகவும் இரா.நாகலிங்கம் என்பவர் தமிழீழத் தேசியத் தலைவரால் புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட தங்க விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

1986ஆம் ஆண்டு ஜேர்மனியில் 10 பிள்ளைகளுடன் தமிழ்மொழிப் போதனையை இவர் ஆரம்பித்தார். இன்று 6 ஆயிரம் மாணவர்களும் 650 ஆசிரியர்களும் அங்கு பணியாற்றுகின்றனர்.

நேற்றைய கௌரவிப்பு நிகழ்வில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளர் வி.மணிவண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். (த)

## குடும்பப் பெண் சுட்டுக் கொலை!
### மட்டு. சித்தாண்டியில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் சித்தாண்டிப் பகுதியில் நேற்று அதிகாலை குடும்பப் பெண் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் 52 வயதான சித்திரம் என அடையாளம் காணப்பட்டுள்ளார். பிரஸ்தாப பெண்ணின் மகனைத் தேடிவந்தவர்கள் அவர் வீட்டில் இல்லாத காரணத்தால் தாயாரை சுட்டுக்கொன்றுவிட்டுச் சென்றுள்ளதாக கிழக்குப் பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

குறிப்பிட்ட ஒரு அமைப்பின் சீருடையை ஒத்த ஆடையை அணிந்தவர்களே இந்தக் கொலையைப் புரிந்துள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் ரி 56 துப்பாக்கியின் வெற்றுத் தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன. (இ-08)

## பொறுப்பாளர் எழிலன் தடுக்கப்பட்டார்

(மூதூர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் மூதூர் கிழக்கு கட்டைபறிச்சான் இராணுவ முகாமிலிருந்து தொடர்ந்து பிரயாணம் செய்வதற்கான அனுமதியை இராணுவ அதிகாரிகள் வழங்காது சுமார் அரை மணிநேரம் வரை தடுத்து வைத்தனர்.

நேற்றுக் காலை 8.15 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தினால் அவரது (10 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் யுத்தத்திற்கு அரசு தயார் இல்லை!

### சமாதானத்தை வலியுறுத்தி ஜனாதிபதி நோர்வேக்கு சூசகமாக அறிவிப்பு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இலங்கை அரசின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுக் கேள்விக் குறியாகியுள்ள சூழ்நிலையில், மீண்டுமொரு யுத்தத்திற்கு அரசு தயாரில்லை என்பதை சர்வதேச உலகுக்கு காட்டும் நடவடிக்கைகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஈடுபட்டிருப்பதாக அரசுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்ற கையோடு அரசு-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக மீண்டும் ஆரம்பித்து மத்தியஸ்தம் வகிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வே அரசுக்கு உத்தியோகபூர்வமாகக் கோரிக்கைவிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் கோரிக்கையை அடுத்து நோர்வே அரசு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் முயற்சிகளை மேற்கொண்டபோதும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் – முஸ்லிம்கள் நேற்று சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலை குரங்குப்பாஞ்சான் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், கிண்ணியா முஸ்லிம்களுக்குமிடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது குரங்குப்பாஞ்சான் முகாமிலிருந்து 50 மீற்றர் தூரத்துக்கு அப்பால் வேளாண்மை செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை ஆரம்பமான பேச்சு சுமார் இரண்டரை மணிநேரம் வரை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலனும், முஸ்லிம்கள் தரப்பில் ஜாமீர் துலாமி சபைத் தலைவர் தலைமையிலான குழுவினரும் கலந்துகொண்டனர். (த-08)

## ஏ.எல் பரீட்சை பெறுபேறு மீள் திருத்தத்திற்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 2 கட்டங்களாக நடத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின.

இப் பரீட்சைப் பெறுபேறுகளில் திருப்தி அடையாத பரீட்சார்த்திகள் விடைத்தாள்களை மீள் திருத்தம் செய்ய விரும்பினால் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டும எனப் பரீட்சைகள் திணைக்களம் கேட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.கா. -அரசுடன் இணைந்தால் அமைச்சர் பதவியைத் துறப்பேன்!
### சி.வி. இரத்நாயக்க அறிவிப்பு

(கண்டி)

நாட்டின் நன்மைகருதி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுடன் இணைந்து செயற்பட முன்வருமானால் எனது அமைச்சர் பதவியை அவர்களுக்கு விட்டுக்கொடுக்கத் தயாராகவுள்ளேன்.

இவ்வாறு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சி.வி.ரத்நாயக்க பகிரங்கமாக அறிவித்துள்ளார். கண்டியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாடு ஒன்றிலேயே அமைச்சர் சி.வி.ரத்நாயக்க மேற்கண்டவாறு பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

அச் செய்தியாளர் மாநாட்டில் அவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தமிழீழ காவல்துறையுடன் பேச்சு

(கிளிநொச்சி)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுக்குமிடையே கிளிநொச்சியில் நேற்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ காவல்துறையின் நடுவப் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற இச் சந்திப்பு சுமார் 3 மணித்தியாலங்கள் வரை இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பில் தற்போதைய பல்வேறு (10 ஆம் பக்கம் பார்க்க)

## உ/த பரீட்சைப் பெறுபேறு நேற்று வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று இணையத்தளத்தில் வெளியாகியது. கொழும்பிலும், புறநகர்ப் பகுதிகளிலும் பெறுபேறுகள் உடனடியாகவே பாடசாலைகள் ஊடாக வெளியிடப்பட்டன.

யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளின் பெறுபேறுகள் இன்று உரிய பாடசாலை (10 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் சிங்கப்பூரில்!

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சிங்கப்பூருக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இவருடன் சபாநாயகர் லொக்குபண்டார, ஜி.எல்.பீரிஸ், மலிக் சமரவிக்கிரம ஆகியோரும் அங்கு சென்றுள்ளனர்.

இவர்களின் விஜயம் பற்றி உடனடியாக தெரியவராதபோதிலும் சிங்கப்பூரின் முன்னாள் முதலீட்டுச்சபைத் தலைவர் அர்ஜூன் மகேந்திரனைச் சந்திக்கவே அவர்கள் சிங்கப்பூர் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-08)

## சிறுவிளம்பரம்

### தேவை

வெல்டிங் ஓட்டுநர், ரிங்கர் வேலை செய்யக்கூடியவர்களும் தச்சு வேலை, மெக்கானிக் உதவி யாளர்களும் தேவை. கராச்சும் வாடகைக்கு கொடுக்கப்படும். சிவலிங்கம் மோட்டோர்ஸ் 77, மானிப் பாய்வீதி,யாழ்ப்பாணம் (8722)


## நூலகம்

(மருதங்கேணி)

குடத்தனை தமிழ்க்கலவன் பாடசாலைக்கு புதிய நூலகக் கட்டடம் அமைக்கப்பட்டு இம் மாதம. 25ஆம் திகதி திறந்து வைக்கப் படவுள்ளது.

இதற்கான நிதியினை வடம ராட்சி கிழக்கு புனர்வாழ்வுக் குழு வழங்கியுள்ளது .

(உ-35)

# நாட்டில் குற்றச் செயல்கள் மலிவதற்கு இராணுவ விட்டோடிகளே காரணம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகளால் தீர்க்கக் கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக வடக்கு-கிழக்கு இளைஞர், யுவதிகள் ஆயுதங்களை ஏந்தியமையானது பாரிய அழிவு களை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா, ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு பேசு கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் கூறுகையில்,

1971ஆம் ஆண்டு முதல் 1980ஆம ஆண்டுவரையிலான காலப்பகுதி யில் தென்னிலங்கையிலும் ஆயுத தாரிகள பெரும் அழிவுகளை ஏற்படுத் தியுள்ளனர்.

இதன் காரணமாக நாட்டில 33 ஆயிரத்திற்கும் அதிகமான இளை ஞர், யுவதிகளின் உயிர்கள் பலி கொடுக்கப்பட்டுள்ளன.

நற்பண்புகளைக் கொண்ட இளைய தலைமுறை ஒன்றைக் கட்டி எழுபபும் நடவடிக்கைகள் பாடசாலை களில் இடம்பெறவேண்டும் இதற் கென விழுமியங்கள் எனும் விஷேட செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட வுள்ளது.

யுத்தம் நடைபெறுகின்ற நாடு களில் குற்றச்செயல்களின் எண் ணிககைகள் அதிகரித்திருக்கின்றன.

யுத்தம் காரணமாக இராணுவத் தில் இருந்து ஆயுதங்களுடன் தப்பிச் சென்ற சுமார் 40 ஆயிரத் துக்கும் அதிகமானவர்கள் பல் வேறு பிரதேசங்களில் இருக்கின் றனா. அவர்கள் ஆயுதங்களை விற் பனை செய்கின்றனர். இராணுவத் தில் இருந்து தப்பிச் சென்றவர் களும் தொழில் இல்லாத காரணத் தினால் தமது அனுபவத்தின் மூல மாக வேறொருவருக்காகக் கொலை களைச் செய்கின்றனர்.

இந்த நாட்டில் நடைபெறும் ஒவ் வொரு குற்றச்செயலுக்கு இராணு வத்திலிருந்து தப்பிச் சென்றவர்



களும் யுத்தத்தில் ஈடுபடும் மற்றைய தரப்பினருமே காரணம். இந்த யுத் தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்கு குற்றச்செயல களுடன் பல்வேறு காரணங்களும் உள்ளன.

ஆசிய வலயத்தில் ஊழல் மோசடி மிக்க பொலிஸ் மற்றும் நீதிமன் றக் கட்டமைப்பு இலங்கையிலேயே காணப்படுவதாக அரச சார்பற்ற நிறுவனமொன்றின் அறிக்கையில் குறிபபிடப்பட்டுள்ளது. இது குறித்து வெடகப்படுகின்றேன் என்று குறிப் பிட்டுள்ளார்.

(உ-9)

# விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்து ஊதுகின்றது

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினர், தமிழீழ விடுதலைப்புலிகளின் பேச்சாளர்களாகச் செயற்படுகின்ற னர் என ஜே.வி.பி. குற்றஞ்சாட்டி யுள்ளது.

இதுதொடர்பாக ஜே.வி.பி. அறிக கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் நலன் களைக் கருத்தில் கொண்டு செயற் படுவதில்லை. மாறாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நலன் களைக் கருத்தில் கொண்டு அவர் களுககாகக் குரல் கொடுத்து வரு கின்றது.

அரசாங்கம் இனப்பிரச் சினைக் குத தீர்வுகாண்பதற்காக பேச்சுவார்த் தைக்கு வருமாறு தமிழீழ விடு தலைப்புலிகளைக் கேட்ட போது அவர்கள் இடைக்கால நிர் வாகம் பற்றியே பேசவேண்டும் என அடம் பிடிக்கின்றார்கள். இவர் களின் இந்தச் செயற்பாட்டுக்கு ஐக்கிய தேசியக்கட்சியும் ஒத்து ஊது கின்றது.

எது எவ்வாறாயினும் நாட்டின் ஒருமைப்பாட்டையும் இறைமையை யும் தியாகம் செய்வதற்கு நாம் தயா ரில்லை.


இதனால் அரசின் செயற்பாடு களுக்கு எல்லாம் நாம் ஆதரவை வழங்க முடியாதிருக்கின்றோம். குறிப்பாக அரசு -புலிகளுடன் இடைக் கால நிர்வாகம் பற்றிப் பேசுவதற்கு இணக்கம் தெரிவிக்குமானால் நாம அதற்கு ஆதரவளிக்கமாட்டோம் என்றுள்ளது.

(உ-க)

## தரம்-5 முன்னோடிப பரீட்சை

சமூக முன்னேற்றக் கழகங் களின் சமாசத்தினதும், புனர்வாழ் வுக் கல்வி அபிவிருத்தி நிதியத்தி னதும் அனுசரணையுடன் பொதுக்கல் விச் சபையால் தரம்-5 புலமைப் பரீட்சைகுத் தோற்றவுள்ள மாண வர்களுக்கு முன்னோடிப்பரீட்சை ஒன்று நடத்தப்படவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப் பித்த மாணவர்களுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணக்கு யாழ் மத்தியகல்லூரியில் இட் பரீட்சை நடைபெறவுள்ளது. (உ)



## மருத்துவப் பட்டதாரிகளுக்கு உள்ளகப் பயிற்சி

(கொழும்பு)

நாட்டின் சகல பல்கலைக்கழகங் களில் இருந்தும் வெளியேறிய 272 மருததுவ பட்டதாரிகளுக்கு வைத்தியசாலைகளில் ஒரு வருட கால உள்ளகப் பயிற்சி வழங் கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

272 மருத்துவ பட்டதாரிகளுக் கும் போதானா வைத்தியசாலை தள், ஆதார வைத்தியசாலைகள், பெரியாஸ்பத்திரிகள் ஆகியவற்றில இப்பயிற்சிகள் வழங்கப்பட்டு கிராமப்புறப்பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளிலும் அரச மருத்துவ நிலைய்ங்களிலும் நியம னங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் இதனால் கிராமப்புற மக்கள் நன்மை அடைவார்கள் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

(உ-க,60)


# சோமசுந்தரப் புலவரின் சிலை புதனன்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

நவாலியூர் சோமசுந்தரப் புல வரின் உருவச்சிலை திறப்புவிழா எதிர்வரும் 11ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணிக்கு யா/ நவாலி மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் பு. ஸ்ரீவிக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் புலவரின் உருவச் சிலையை செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் திரைநீக்கம் செய்து வைக்கவுள்ளார்.

சிறப்பு உரைகளை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன், கவிஞர் சோ. பத மநாதன், பேராசிரியர் அ.சண்முக தாஸ், யாழ். வர்த்தக வங்கி முகா



மையாளர் ரவீந்திரா ஆகியோா நிகழ்த்தவுள்ளனர்.

(உ)



யாழ். மத்திய கல்லூரியின் தமிழ்த் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி செ. திருநா வுக்கரசு மற்றும் கல்லூரி அதிபர் க. இராசதுரை ஆகியோரைக் கல்லூரியின் தமிழ்மன்ற மாணவர்கள் வரவேற்பதை முதலாவது படத்திலும்,

இந்நிகழ்வில் இடம்பெற்ற பலரதும் பாராட்டைப் பெற்ற "புலவர் தந்த பரிசு" நாடகத்தின் ஒரு காட்சியை மற்றைய படத்திலும் காண்க.

### புலிகளின் யோசனைக்குப் புறம்பாக

# இடைக்கால நிர்வாக அலகை தயாரிப்பதில் அரசு முழுமுனைப்பு

(கொழும்பு)

மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க, இடைக்காலத் தன் னாடசி அதிகாரசபை யோசனையைக் கவனத்திலெடுக்க வேண்டுமென்று விடுதலைப் புலிகள் அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், சந்தி ரிகா தலைமையிலான ஒரு குழு, இதுபோன்ற இன்னுமொரு இடைக் கால நிர்வாக அலகைத் தயாரிக் கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக நம்பகமாகத் தெரியவருகிறது.


விடுதலைப் புலிகள் கையளித்த இடைக்கால நிர்வாக அலகையொத்த, ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட சில உரிமைகளை மட்டும் வழங்கும் பிறிதொரு இடைக்கால நிர்வாக சபைக்கான அறிக்கையொன்றை அவசர அவசரமாக சந்திரிகா தலை மையிலான ஆலோசனைக் குழு தயாரித்து வருவதாகவும், அந்த இடைக்கால நிர்வாக அலகின் கீழ் பேச்சு நடாத்தவே அரசு இரகசிய முடிவுகளை எடுத்துள்ளதாகவும் நமபத்தகுந்த செய்திகள் தெரிவிக் கின்றன. இத்தகைய பிறிதொரு இடைக்கால நிர்வாக அலகொன்றை அரசு தயாரித்து வருகிறதா என்று ஊடக அமைச்சர் மங்கள சமரவீர வைக் கேட்டபோது, அதை ஒத்துக கொணட அமைச்சர், அரசு தயாரிக்கும் இந்த இடைக்கால நிர்வாக அலகு, வடக்கு-கிழக்கிற்கான புனர்நிர் மாணப் பணிகளுக்கு முன்னிடம் வழங்குவதுடன், நிரந்தரத் தீர்வு குறித்து அதிக கவனமெடுக்குமென் றும் தெரிவித்துள்ளார். (உ-க)

# மனோ-மலிக் குழு மீளப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்

(கொழும்பு)

நின்று போயுள்ள பேச்சுக் களைத் தொடர்வதற்கு ஜே.வி.பி. தனது ஆதரவை வழங்க மறுத்து வரும் நிலையில், இடைக்காலத் தன்னாட்சி அலகின் கீழ் பேச்சு வார்த்தை தொடருமானால், அதற்கு தாம் ஆதரவு தரவுள்ளதாக ஐ.தே.மு. முன்னர் தெரிவித்திருந்தது.

இதற்கிடையில், ஆளும் கூட் டுக் கட்சித் தலைமைப் பதவியை இராஜிநாமா செய்த சந்திரிகா, மீண டும் பேசசுக்களை ஆரம்பிக்க ஏது வான ஓர் சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இதன் அடிப் படையில், தடைப்பட்டிருந்த மனோ-மலிக் பேச்சுக்களை மீளவும் ஆரம பிக்கப் பணித்துள்ளதுடன், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவையும் சந்தித்துப் பேச அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. (உ-க)



பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முல்லையடி திராக்கரை வீதி புனரமைப்பின் ஆரம்ப நிகழ்வில் பளைப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி மங்களவிளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:இ.செல்வநாதன்)

## இன்று ஒரு தகவல்

# தவறு செய்யுங்கள்

ஒருத்தர் நின்று கொண்டிருந்தார். நின்று கொண்டே யோசனை செய்து கொண்டிருந்தார். " என்ன யோசனை?" என்று அவரைப் பார்த்துக கேட்டார் இன்னொருவர்."எப்படி எழுந்திருப்பது என்று யோசனை செய்கிறேன்" என்றார். ஏற்கனவே நின்று கொண்டிருக்கும் ஒருவர் எப்படி எழுந்திருப்பது என்று யோசனை செய்கிறாராம். இது எப்படி இருக்கிறது பாருங்கள்!

கீழே விழுந்தால் தானே எழுந்திருக்க முடியும். அதனால் அவர் முதலில் கீழே விழ வேண்டும். அதன் பின்பு தான் அவர் எழுந்திருக்க முடியும். இந்த உலகத்தில் நடக்கக் கற்றுக் கொள்வதற்கு முன்னால் கீழே விழாத மனிதர்கள் உண்டா? விழுந்து புரண்டு எழுந்து தானே நடக்கக் கற்றுக் கொள்கிறான். நாம் தெரிந்து கொள்ள வேண்டியது ஒரு முக்கியமான உண்மை. உலகத்தில் தவறு செய்யாத மனிதர்களே இல்லை. அதனால் எப்போதாவது உங்கள் வாழ்வில் தவறு செய்துவிட்டால் அப்படியே மனம் உடைந்து போய் உட்கார்ந்து விடாதீர்கள்.

ஒரு தவறு நடந்து விட்டால் அதை நாம் ஒரு பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதே தவறு மறுபடியும் நடக்காதபடி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். தடைக்கல்லைப் படிக் கல்லாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஒரு அலுவலகத்தில் உள்ள ஒரு உயரதிகாரி சிறந்த நிர்வாகி என்று பெயர் வாங்கியவர். அவர் தனக்குக் கீழே பணி புரிபவர்களிடம் என்ன சொல்வார் தெரியுமா? நீங்கள் எத்தனை முறை வேண்டுமானாலும் தவறு செய்யலாம் ஆனால் ஒரு விஷயம். ஒரே தவறை மறுபடியும் செய்யக் கூடாது என்பாராம். இதை மேலோட்டமாகப் பார்க்கும் போது அவர் ஏதோ தனது ஊழியர்களைத் தவறு செய்யத் தூண்டுவது போல் தெரியும். ஆனால் உண்மை அப்படி இல்லை.

இன்று நடப்பது என்ன தெரியுமா? அநேகமாக எல்லா மனிதர்களுமே ஒரே தவறைத் தான் மீண்டும் மீண்டும் செய்கின்றார்கள். விளையாட்டு வீரர்கள் ஒரே மாதிரியான தவறுகளைத் திரும்பத் திரும்பச் செய்வது உண்டு. கணக்கு எழுதுபவரைப் பாருங்கள் ஒரே தவறை மீண்டும் செய்வார். அலுவலகம் செல்பவரைக் கவனியுங்கள். ஒருநாள் தாமதமாக வந்தால் பரவாயில்லை. ஆனால் தினமும் நேரம் பிந்தி வருவார்கள்.

சரி... இதுபோல் செய்த தவறையே திரும்பத் திரும்பச் செய்வதற்கு என்ன காரணம்? சோம்பல், ஞாபகமறதி, கவனக்குறைவு, தனது திறமை மீது அளவுக்கு மீறிய நம்பிக்கை இப்படி இதில் ஏதாவது ஒரு காரணமாக இருக்கலாம். ஒருமுறை செய்த தவறை மீண்டும் செய்வதில்லை என்று முடிவு செய்து கொண்டு அதை செயற்படுத்தக் கற்றுக் கொண்டால் போதும். வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்.

ஒருவர் தனது இரண்டு காதிலும் பன்டேஜ் போட்டுக் கொண்டு வந்தார். என்ன நடந்தது எனறு விசாரித்தார் அவரது நண்பர். "ஒன்றுமில்லை சார். வீட்டில் மிகுந்த ஆர்வமாக கிரிக்கெற் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது என் மனைவி துணிகளை அயர்ன் பண்ணிக் கொண்டிருந்தார். திடீரென்று அடுப்படிக்குப் போய் விட்டார்.

அப்போது பார்த்து தொலைபேசி அடிக்கவே ஓடிப்போய் எடுத்து காதில் வைத்தேன். அப்போது தான் அது அயர்ன் பொக்ஸ் என்று தெரிந்தது. சூடாக இருந்தது. சுட்டுவிட்டது" என்றார். "சரி இரண்டு காதும் ஏன் இப்படி ஆனது?" என்றார் மற்றவர். "அதே ஆள் மீண்டும் தொலைபேசி எடுத்தான்" என்கிறார் இவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இடைக்கால நிர்வாக சபை யோசனை அடிப்படையில் பேச அரசு இணங்காது

## விமல் வீரவன்ச உரை

(மாத்தறை)

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனை அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களைத் தொடர ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒருபோதும் இணங்காது என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜே.வி.பி. இணங்கியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் மாத்தறையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நாட்டுப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் கூட்டம் ஒனறில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்துள்ளார்.

இடைககால நிர்வாக சபையை நடைமுறைப்படுத்தினால் இலங்கையில் இரு இராசசியங்கள் உருவாகுவதை எவாராலும் தடுக்கமுடியாது. எனவே இது தவிர்க்கப்படல் வேண்டும் என்பதற்காகவே இடைக்கால நிர்வாக சபை யோசனை அடிப்படையில் பேச்சுக்கள் தொடரப்படுவது என்ற வடயத்தை நாம் எதிர்த்து வருகிறோம்.



நாட்டின் இறைமையைப் பாதிக்கக் கூடிய எந்தவொரு விடயமாக இருந்தாலும் அதனை எமது அரசாங்கம் ஒருபோதும ஏற்காது.

இந்த அடிப்படையிலே தான் நாட்டைப் பிளவு படுததும் நிபந்தனைகளுடன் கூடிய புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையிலான பேச்சுக்களை நடத்த கூட்டமைப்பு அரசாங்கம் மறுப்பைத் தெரிவித்து வருகின்றது.

இதுவே தான் ஜனாதிபதியினதும் உறுதியான நிலைப்பாடு எனவும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார். (உ-ப,64)

# மதமாற்ற நடவடிக்கைகளை சட்டங்களால் தடுத்துவிட முடியாது

## ஜனாதிபதி சந்திரிகா கருத்து

(கொழும்பு)

எத்தகைய மதமாற்ற நடவடிக்கைகளையும் சட்டங்களால் தடுத்துவிட முடியாது. அதற்குப் பதிலாக வறிய மக்களுக்கு பௌத்த குருமார்களே உதவவேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எம்மால் சட்டங்களைக் கொண்டு வரமுடியும்.ஆனால், அதை அமுல்படுத்துவது யார்?

அதற்கு எமக்கு இன்னொரு பொலிஸ்படை அவசியம். ஏன் மக்கள் மதமாற்றப்படுகிறார்கள் என்பதற்கான காரணங்களைக் கண்டறியாமல் எத்தகைய சட்டங்களையும் கொண்டு வருவதில் பயனில்லை.

நாட்டின் பிரஜைகள் அனைவருக்கும் தத்தமது சமயத்தைக கடைப்பிடிக்கும் உரிமை உள்ளது. அதற்கு யாரும் கட்டாயப் படுத்தக் கூடாது.

இன்றைய கால கட்டத்தில் பலர் கோவில்களுக்கு செல்வதற்கு அக்கறை காட்டுவதில்லை. பௌத்த குருமார்களும ஏனையவர்களைத் தாக்குவதை நிறுத்தவேண்டும். வறியவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்து கொடுத்தல் வேண்டும். புத்தசாசன அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க முன்னெடுக்கும் சகல திட்டங்களுக்கும் ஆதரவு வழங்க வேண்டும்.

நாடுமுழுவதும் 10ஆயிரம் கோவில்கள் உள்ளன. 25ஆயிரத்திற்கு மேற்பட்ட பௌத்த குருமார் உள்ளனர். இவர்கள் சாதாரண மக்களின் அன்றாட வாழ்வில் கூடுதலாக அக்கறை காட்டவேண்டும் என்று கூறியுள்ளார். (உ-6)

## இராசி பலன்

08. 08. 2004
(ஆடி 24, ஞாயிற்றுக்கிழமை)
அட்டமி மு. இ 7. 55மணி வரை
பரணி பி. ப. 5. 13மணி வரை
இராகுகாலம் 4. 34 - 6. 04 மணி வரை
சுபநேரம் 9. 04 - 10. 34 மணிவரை
அட்டமி, நவமி

**மேடம்**
பெரியோர் மதிப்பு, சயனசுகம், முயற்சி கைகூடும் புதிய சிந்தை.

**இடபம்**
தந்தைவழி நினைவு, உணர்ச்சி வசப்படல், பணவிரயம், முயற்சிதாமதம்.

**மிதுனம்**
தொழில்சிந்தை, போசனநன்மை, உறவினர் வருகை, தெய்வசிந்தை.

**கடகம்**
புதிய சிந்தை, எடுத்தகருமங்கள்கைகூடும், வாக்குமேன்மை, போசன சுகம்.

**சிங்கம்**
ஆன்றோர் மதிப்பு, வயிற்றுவலி, சாரப்பிரயாசை, அச்சமான நிலை.

**கன்னி**
வண்தொல்லை, பிரயாண தடங்கல், உடல் வியாதி, பணவிரயம்.

**துலாம்**
அபுர்வ சந்திப்பு, வாகனவசதி, களஸ்திர நன்மை, காரிய சித்தி.

**விருச்சிகம்**
திடீர்பயணம், உடல் நலம், சத்துருஜெயம் முயற்சி கைகூடும்.

**தனுசு**
கௌரவக்குறைவு, காரிய இடையுறு, சொத்துக்களால் கவலை, தனவிரயம்.

**மகரம்**
பயந்த சுபாவம், நண்பர்கள் வெறுப்பு, எடுத்த காரியம் தாமதமாகும், போசனச்சுகக்குறைவு,

**கும்பம்**
கூட்டுமுயற்சி, அந்நியர் சந்திப்பு, பொருள் சேர்க்கை, நல்லசெய்தி.

**மீனம்**
பொருள் விரயம், தொழிலில்மந்த நிலை, செலவாக்குக்குறைவு, முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## குடித்தொகை அபிவிருத்திக் கற்கை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா

(யாழ்ப்பாணம்)

யாழ்பபாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் படத்தினால் குடித்தொகை அபிவிருத்திக் கற்கை நெறிக்கான பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கு தகுதியுடை விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை 14.08.2004 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து புவியியல,திட்டமிடல், பொருளியல், சமூகவியல்,மானடவியல், உளவியல், அரசியல் விஞ்ஞானம், கணிதம்,புள்ளிவிபரவியல், சமூக சுகாதாரம் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒன்றினை பாடமாகப் பயின்று பட்டம் பெற்றவர்களிடமிருந்தும அரச,அரசு சார்பற்ற நிறுவனங்களில் குறிப்பாக குடிக்கணிப்புத் திணைக்களம்,சுகாதாரத் திணைக்களம், சமூகநல திணைக்களம், நில அளவைத் திணைக்களம், திட்டமிடல் பிரிவுகளில் குறைநத பட்சம் 5வருட அனுபவம் கொண்ட நிர்வாக தரத்திலுளள உத்தியோகத்தர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அண்மைக் காலங்களில் இக்கற்கை நெறியானது இலங்கையிலும் சர்வதேசங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இக்கற்கைநெறியினைக் கற்பதன் மூலம் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான மேலதிக தகைமைகளைப் பெற்றுக்கொள்வதுடன் தொழிலில் உள்ளோர் உயர்பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் என நம்பப்படுகிறது.

இக்கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை பட்டப்பின் படிப்புகள் பீட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் என பட்டப்பின் படிப்புகள் பீடபதில் பீடாதிபதி பேராசிரியர் சபா. ஜெயராஜா தெரிவித்துள்ளார். (உ)

## குளங்கள் நிறுவும் திட்டத்தின் முதல் கட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் 10 ஆயிரம் பாரிய குளங்களை நிறுவுவது என்ற அரசாங்கத்தின் திட்டத்தின் முதலாவது கட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக விவசாய கால்நடை வளங்கள் காணி நீர்ப்பாசன அமைச்சர் அனுர குமாரதிசநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் அடுத்த 4மாதங்களுக்குள் சிறிய அளவிலும் நடுத்தர அளவிலான ஆயிரம் குளங்களை நிர்மாணிப்பதற்கான பணிகள் இடம்பெறவுள்ளதாகவும் இதற்காக திறைசேரி 50கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-க,60)

# வலிகாமம் கல்வி வலய தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(இணுவில்)

வலிகாம வலய மட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே.

**வாசிப்பு (பிரிவு I)** : மே.சோபிகா யா/ஏழாலை சைவ மகாஜனா வித்தி, சி.ருகல்யா தந்தை செல்வா தொ.நி.பள்ளி, யோ.றஜீவன் அராலி சரஸ்வதி ம.வித்தி.

**(பிரிவு II)** : கோ.அமுதலோஜினி : இளவாலை கன்னியர் மடம் ம.வி., பொ.தனுஷாயினி இணுவில் மத்திய கல்லூரி, இ.சங்கீதா சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தி.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு (பிரிவு I)** :

நா.நாகசிந் துஜா மூளாய் சைவப் பிரகாச வித்தி, கு.சாஜிசங்கர் தந்தை செல்வா தொ.நி.பள்ளி, அ.அனுசாந்த் தாவடி இ.த.க. பாட சாலை.

**ஆக்கம் எழுத்து (பிரிவு I)** :

இ.அனோஜா அராலி சரஸ் வதி ம.வி., சு.கபிதா சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, பா.ரெனி சியா உடுவில் அ.மி.த.க. பாடசாலை.

**கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல் (பிரிவு II)** : மு.கர்ஷனா மகாஜனாக் கல்லூரி, க.ஆன்ஜஸ்மின் இளவாலை கன்னியர்மடம் ம.வி., ப.பவிதா பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

**கட்டுரை வரைதல் கடிதம் எழுதுதல் (பிரிவு III)** : பா.நிதுஜன் மகாஜனாக் கல்லூரி, க.கல்யாணி இணுவில் மத்திய கல்லூரி, ச.தாரணி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

**கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல் (பிரிவு IV)** வா.தர்மிஷா யூனியன் கல்லூரி, வி.அபிராமி மூளாய் சைவப் பிரகாச வித்தி, ந.சாகினி இளவாலை கன்னியர்மடம் ம.வி.

**தமிழியற் கட்டுரை வரைதல் இலக்கியம் நயம் (பிரிவு V)**: சு.சுகிர்தா மகாஜனாக் கல்லூரி, செ.அனுசகுமார் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, சு.தனாஞ்சலி ஏழாலை ம.வி.

**இலக்கணப் போட்டி (பிரிவு IV)**

கு.சௌதாமினி பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., வி.உறனிதா அருணோதயாக் கல்லூரி, ந.கௌசல்யா மானிப்பாய் மெமோறியல் ஆங்.பாடசாலை.

**(பிரிவு V)** தி.காயத்திரி மகாஜனாக் கல்லூரி, சி.கயல்விழி பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.,சி.சிவதாரணி இணுவில் மத்திய கல்லூரி.

**குறுநாடக ஆக்கம்(பிரிவு IV)**

ஸ்ரீ.றெசாணி மானி.மெமோறியல் ஆங்.பாட., ஆ.சோபனா உடுவில் முருகமூர்த்தி வித்தி, த.நிருஜா மல்லாகம் ம.வி.

**(பிரிவு V)** கு.அறிவழகன் மல்லாகம் ம.வி.,தி.விஜியேந்திரன் மானி.மெமோறியல் ஆங்.பாட.

**கவிதை ஆக்கம் (பிரிவு IV)**

ஜ.றபிந்தா சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, ம.வனிதா மானிப்பாய் மகளிர் கல்லூரி, யோ.கேசிகா யூனியன் கல்லூரி.

**(பிரிவு V)** ச.நிஷாந்தி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, சோ.சுபநேமி இணுவில் இந்துக் கல்லூரி, த.றஜிதா மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**சிறுகதை ஆக்கம் (பிரிவு IV)**

சி.நிஷாந்தினி யூனியன் கல்லூரி, கு.சயந்தா பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., அ.கொஸ்ரோ இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி.

**(பிரிவு V)** யோ.ரிஷிகா மானிப்பாய் மகளிர் கல்லூரி, ச.நிரஞ்சலா ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கு.கல்யாணி பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., ச.அனித்தா வயாவிளான் ம.வி.

**பேச்சு (பிரிவு I)** சி.கஜானா மகாஜனாக் கல்லூரி, சு.ரஞ்சினி யாழ்ப்பாணக் கல்லூரி, அ.திருமுருகன் மானிப்பாய் சோதி வேம்படி வித்தி.

**(பிரிவு II)** ம.ரொசீன் மெலானி இளவாலை கன்னியர்மடம், சி.சாம்பவி உடுவில் மகளிர் கல்லூரி, சு.தசாங்கன் யூனியன் கல்லூரி.

**(பிரிவு III)** யோ.கார்த்திகா மகாஜனாக் கல்லூரி, நா.சுலக்ஷிகா இளவாலை கன்னியர்மடம் ம.வி., ஸ்ரீ.ராகவர்த்தினி இராமநாதன் கல்லூரி,

**(பிரிவு IV)** சி.சுனித்தா பண்ணாகம் மெய்கண்டான் ம.வி, ந.வெண்ணிலா மகாஜனாக் கல்லூரி, ச.தர்சிகா சுதுமலை சிந்மய பாரதி வித்தி.

**(பிரிவு V)** ஞா.போல்அன்ரன் இணுவில் இந்துக் கல்லூரி, க.சுகன்யா சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, ம.கண்ணதாசன் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**பாவோதல் (பிரிவு I)**

யோ.நிதூஷியா ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாட, வி.சுபாங்கி வட்டு. மத்திய கல்லூரி, பா.புகழரசி மகாஜனாக் கல்லூரி.

**(பிரிவு II)**

சா.சர்மிளா வட்டு. மத்திய கல்லூரி, அ.வினோஜா மாதகல் சென்ஜோசப் வித்தி, க.ஒமேக்கா உடுவில் மகளிர் கல் லூரி.

**(பிரிவு III)** தி.சேந்தன் யாழ்ப்பாணக் கல்லூரி, க.கிருஷ்ணா மகாஜனாக் கல்லூரி, க.மயூரினி மாதகல் சென்ஜோசப் வித்தி.

**(பிரிவு IV)** ஜெ.வைஷ்ணவி மானி.மெமோறியல் ஆங்.பாடசாலை, இ.துளஷா மகாஜனாக் கல்லூரி, ப.உமா பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.

**(பிரிவு V)** தே.நிரோஸ் இணுவில் இந்துக் கல்லூரி, லோ.சுஜி அருணோதயாக் கல்லூரி, ச.சிவந்தன் யாழ்ப்பாணக் கல்லூரி.

**இசையும் அசைவும் (பிரிவு I)**

வி.அமல்நிகோதர்சினி நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த., இ.தேவிகா மூளாய் சைவப்பிரகாச வித்தி, இ.வேனுஷா ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி.

**(பிரிவு II)** இ.மாதங்கி இணுவில் இந்துக் கல்லூரி, எ.அமியா மானிப்பாய் சென்ற்ஆன்ஸ் றோ.க.த.க., அ.சாளிகுயின்சனி யூனியன் கல்லூரி.

**(பிரிவு III)** ச.சிவராமன் சங்கானை சிவப்பிரகாச வித்தி, இ.மதுசூதனன் இணுவில் இந்துக் கல்லூரி, ச.சங்கீதா மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**(பிரிவு IV)** கு.ஜெகதீசன் யூனியன் கல்லூரி, ஜே.மேரிறொசிற்றா மானிப்பாய் சென்ற்ஆன்ஸ் றோ.க.த.க., கு.சொருபிகா சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

**(பிரிவு V)** வி.ஜீவிகா யூனியன் கல்லூரி, இ.தர்மினி மானிப்பாய் மகளிர் கல்லூரி, செ.சுபகரி யாழ்ப்பாணக் கல்லூரி.

**இசை (குழு I)**

வட்டு. மத்திய கல்லூரி, ஸ்கந்தரோதயக் கல்லூரி, ஆனைக். பாலசுப்பிரமணிய வித்தி.

**(குழு II)** மானிப்பாய் மகளிர் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**நடனம் தனி (பிரிவு I)**

ஜே.தினேஜா சுதுமலை சிந்மய பாரதி வித்தி, சி.சிவகாசிகா உடுவில் மகளிர் கல்லூரி, ஜெ.அபிராமி யாழ்ப்பாணக் கல்லூரி.

**(பிரிவு II)** கு.பிரியா மல்லாகம் ம.வி., பு.சுகன்யா மானிப்பாய் மகளிர் கல்லூரி, ஸ்ரீ.கௌசிகா யாழ்ப்பாணக் கல்லூரி, த.மோகனப்பிரியா ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**(பிரிவு III)** சி.நிரஞ்சனா உடுவில் மகளிர் கல்லூரி, வ.சுகிர்தா சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, ஜெ.ஸ்ரெடினாபிரியதர்ஷினி மானி.சென்ற்ஆன்ஸ் றோ.க.த.க.

**(பிரிவு IV)** ச.சிவதாரணி இராமநாதன் கல்லூரி, தி.சரண்யா வயாவிளான் ம.ம.வி., அ.துவாரகா யாழ்ப்பாணக் கல்லூரி

**(பிரிவு V)** ஆ.ஜீவிதா இராமநாதன் கல்லூரி, பெ.வி.சதீஸ்குமார் மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஜெ.டா.தபித்தா யாழ்ப்பாணக் கல்லூரி.

**நடனம் (குழு I)** இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்.பாடசாலை, யூனியன் கல்லூரி.

**நாட்டிய நாடகம் (குழு II) திறந்த போட்டி**

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**நாடகம் (திறந்த போட்டி)** ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி.

**வில்லுப் பாட்டு (திறந்த போட்டி)** யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, வயாவிளான் ம.ம.வி.

**விவாதம் (திறந்த போட்டி)** யாழ்ப்பாணக் கல்லூரி, மானிபபாய் மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி.

**தமிழறிவு வினாவிடை (திறந்த போட்டி)** மகாஜனாக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான ம.வி.

**தென்மோடி நாட்டுக் கூத்து (திறந்த போட்டி)** சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி, ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை, ஏழாலை சைவ மகாஜனா வித்தி.

**சிந்து நடைக் கூத்து (திறந்த போட்டி)** அருணோதயாக் கல்லூரி, மானி.மெமோறியல் ஆங். பாடசாலை, பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

**இசை நாடகம் (திறந்த போட்டி)** உடுவில் மகளிர் கல்லூரி, மானி.மெமோறியல் ஆங்.பாடசாலை, அருணோதயாக் கல்லூரி.

**வடமோடி நாட்டுக் கூத்து (திறந்த போட்டி)**

இணுவில் இந்துக் கல்லூரி

**விசேட கூத்து** சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மல்லாகம் ம.வி. (உ-122)

## சிறுப்பிட்டியில் நிலவிய மிதிவெடி அபாயம் நீங்கியது

(யாழ்ப்பாணம்)

பெருமளவு மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிறுப்பிட்டிப் பிரதேசம் ஹெலோ றெஸ்ற் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தினால் மிதிவெடி அகற்றப்பட்டு நேற்று முன் தினம் கோப்பாய் பிரதேச செயலர் கே.இராசதுரையிடம் கையளிக்கப்பட்டது.

சிறுப்பிட்டியில் ஆயிரத்து 60 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தில் கடந்த இரு மாதங்களாக இடம்பெற்ற மிதிவெடி அகற்றும் பணியின்போது பி-4 ரகத்தைச் சேர்ந்த 158 மிதிவெடிகள் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-19)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உயர்தேசிய கணக்கியல், உயர்தேசிய வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு உயர்தொழில்நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது வழங்கப்படும் பட்டதாரிகள் நியமனத்தில் உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தக பட்டதாரிகளை இணைக்காமைக்கு ஆட்சேபம் தெரிவித்து நாடளாவிய ரீதியில எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களும, மாவட்ட தொழில்நுட்ப நிறுவன பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளனர்.

இதில் மேற்படி பட்டம் பெற்ற சகல பட்டாதாரிகளையும் கலந்துகொண்டு தம்மைப் பதிவு செய்துகொள்ளுமாறும் தவறின் பட்டியலில் சேர்த்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படும் எனவும் யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவ பட்டாதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (உ-7)

## செல்வச்சந்நிதி 16ஆம் திகதி கொடியேற்றம்

(பருத்தித்துறை)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி ஆலயத்தின் பூங்காவன உற்சவமும் 28,29,30 ஆம் திகதிகளில் முறையே சப்பற, தேர், தீர்த்த உற்சவங்களும் இடம் பெறவுள்ளன. (உ-52)

## தெல்லி. பிரதேச செயலராக எழிலரசி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலராகக் கடமையாற்றிய கலாநிதி குணராசா யாழ்.மாநகரசபை ஆணையாளராகக் கடமையேற்றதை அடுத்து அந்த இடத்திற்கு சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய திருமதி எழிலரசி நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-19)

## ஞாபகார்த்த நூல் வெளியீடு

(காரைநகர்)

அமரர் பிரம்மஸ்ரீ க.மங்களேஸ்வரக் குருக்களின் ஞாபகார்த்த 'அபரக் கிரியைகளும் சில விளக்கங்களும்' என்ற நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நல்லூர் சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் வே.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ள கலாநிதி பிரம்மஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் எழுதிய இந்த நூல் வெளியீட்டு விழாவில் ஆசியுரையை சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய குருபீடாதிபதி மங்களேஸ்வரக் குருக்களும், அறிமுகவுரையை பிரம்மஸ்ரீ தா.மகாதேவக் குருக்களும் நிகழ்த்தவுள்ளனர். (உ-246)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை தேசிய எழுச்சிப் பேரவையின் கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் அல்லைப்பிட்டி, மண்டைதீவு, வேலணைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

**விவாத அரங்கு -4**

**விடயம்**

**சமூக, கலாசாரப் பிறழ்விற்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே!**

நடுவர் : சிவ.சரவணபவன் (சிற்பி)
(முன்னாள் யா/வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர்)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள


அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.


க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

# புஷ் புத்திசாலித்தனமற்றவர் கிண்டலடிக்கிறார் கிளிண்டன்

(வன்கூவர்)

அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக விளங்கிவரும் சர்வதேச பயங்கரவாதி பின்லேடனை வேட்டையாடும் பணியை பாகிஸ்தானிடம் ஒப்படைத்துள்ளார் அமெரிக்க அதிபர் புஷ். இதை முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் கண்டித்துள்ளார்.





அமெரிக்காவைப் பாதுகாக்கும் பணிகளில் சிலவற்றைப் பாகிஸ்தானிடம் ஒப்படைத்திருக்கிறார் புஷ். அவற்றில் ஒன்றுதான் பின்லேடனை பாகிஸ்தான் வேட்டையாட அனுமதித் திருப்பதாகும். அமெரிக்காவுக்கு முக்கிய அச்சுறுத்தலாக விளங்குபவர் பின்லேடன் தான்.

இது தவிர ஈராக் போருக்காக அமெரிக்காவின் இராணுவம் திருப்பி விடப்படுகிறது.

மத்திய கிழக்குப் பகுதியில் அமைதி ஏற்பட நடவடிக்கை எடுக்காமை, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான மோதல், தலிபானிடம் அவற்றுக்கு உள்ள நெருக்கம், வடகொரியா மற்றும் அதன் அணுவாயுத திட்டங்கள் ஆகியன ஈராக்கைவிட அமெரிக்காவுக்கு அதிக அச்சுறுத்தலாக உள்ளன.

ஈராக் மீது அவசரப்பட்டு புஷ் போரைத் தொடங்கினார். அமெரிக்காவுக்கு முதல்தர அச்சுறுத்தலாக விளங்கும் அல்-கெய்டா மற்றும் ஒஸாமா பின்லேடன் மீது கவனம் செலுத்தாமல் அதில் இருந்து விலகி ஈராக் மீது போர் தொடுத்தார். இது ஆட்சேபத்திற்கு உரியதாகும். புஷ்ஷின் நடவடிக்கை புத்திசாலித்தனமானதா என்ற கேள்வி எழும்புகிறது என்றார் கிளிண்டன்.

(உ)

# குளோனிங் பூனைக் குட்டிகள் அமெரிக்காவில் உருவாக்கம்


(வாஷிங்டன்)

புதிய குளோனிங் முறையில் தனியார் ஆய்வு நிறுவனம் ஒன்று பூனைக் குட்டிகளை உருவாக்கி சாதனை படைத்திருக்கிறது.

குளோனிங் என்ற பலபடியாக்கல் விஞ்ஞானத்தில் மற்றுமொரு புதிய முன்னேற்றம் இது.

பழைய மரபில் இல்லாமல், பாதுகாப்பாக, சிக்கல் இல்லாமல் இரு பூனைக குட்டிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இனி செல்லப் பிராணிகள் வளர்க்கும் பலரும் இம்முறையில் தாய் அல்லது தந்தையைப் போலன்றி சற்று வித்தியாசமான செல்லப் பிராணிகளை விஞ்ஞான முறையில் உருவாக்கலாம். 50 ஆயிரம் டொலர் கொடுத்தால் செல்லப் பிராணியை குளோனிங் முறையில் உருவாக்கித்தர ஜெனடிக் சேவிங்க்ஸ் அண்ட் குளோன் என்ற கம்பனி தயாராகவுள்ளது.

இருந்தபோதும், புதிய குளோனிங் நடைமுறையில் உருவாக்கப்பட்ட பூனைக் குட்டிகள் பற்றிய விஞ்ஞானத் தகவல்கள்



மற்றும் அது சம்பந்தப்பட்ட அறிக்கைகளை நிபுணர்கள் பார்வைக்கு இக்கம்பனி வழங்கவில்லை.

தெற்கு டகோடாவில் உள்ள ஹெமாடெக் எல் லெல்சி என்ற நிறுவனம், மனிதனுக்குத் தேவைப்படும் நோய் எதிர்ப்புச் சக்தி கொடுக்கும் பாலைத் தரும் பசுக்களை குளோனிங் முறையில் உருவாக்கியிருக்கிறது. அந்த அடிப்படையில் 'குரோமோடின் டிரான்ஸ்பர்' என்ற முற்றிலும் புதிய முறையில், இப்பூனைக் குட்டிகள் உருவாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. தனித்தனி வாடகைத்தாய் மூலம் இவைகள் உருவாக்கப்பட்டன. (உ)

# ஐ. நா. வின் காலக்கெடுவை சூடான் அரசு ஏற்றுக் கொண்டது

(கார்டும்)

டர்பூர் பிராந்தியத்தில் சமாதானத்தை ஏற்படுத்தவும், அபிவிருத்திகளை முன்னெடுக்கவும், பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுப்பதாக சூடான் அரசு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையிடம் தெரிவித்துள்ளது.

இந்த வகையில், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப பேரவையின் தீர்மானத்துக்கு அமைய 12 அமசத் திட்டம் ஒன்றை செயற்படுத்தவும் சூடான் அரசு உறுதி பூண்டுள்ளது.

டர்பூரில் 30 நாட்களுக்குள் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை விதித்துள்ள காலக்கெடுவிற்கு அமையவே சூடான் அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குறிப்பிட்ட 30 தினங்களில் மேற்படி பிராந்தியத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை இனங்கண்டு பாதுகாப்பையும் அமைதியையும் நிலைநாட்ட ஆவன செய்யப்படுமென சூடான் அரசு தெரிவித்துள்ளது.

டாபூர் சமாதானப் பேச்சு வார்த்தைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதும் 12 அம்சத் திட்டங்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.

(உ-யே)

## பராகுவே தீ விபத்து பலியானோர் தொகை 409 ஆக உயர்வு

(பராகுவே)

பாராகுவே நாட்டில் உள்ள ஒரு சூப்பர் மார்க்கெட்டில் கடந்த ஞாயிறன்று தீப்பிடித்ததில் 300-க்கும் அதிகமானோர் பலியானது நினைவிருக்கலாம். இந்த் சம்பவத்தில் உயிர் இழந்தோர் எண்ணிக்கை தற்போது 409 ஆக உயர்ந்து விட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

காயமடைந்த பலர் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகிறார்கள. இந்தச் சம்பவம் தொடர்பாக சூப்பர் மார்க்கெட் உரிமையாளர் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர். சூப்பர் மார்க்கெட் தீப்பிடித்த போது இவர்கள் இந்த வளாகத்தை பூட்டி விட்டதாகக் கூறப்படுகிறது. சூப்பர் மார்க்கெட் உரிமையாளர் 'தான் குற்றமற்றவன்' என்று கோர்ட்டில் கதறினாராம். ஆனால் நீதிபதி அக்கருத்தை ஏற்கவில்லை. உரிமையாளர் உட்பட நால்வரையும் சிறையில் அடைக்க மாறு அவர் உத்தரவிட்டார். (உ)


## லெபனான் சாரதிகள் ஈராக்கில் கடத்தப்பட்டனர்

(பெய்ரூட்)

ஈராக்கில் லெபனானைச் சேர்ந்த 4 லொறிச் சாரதிகள் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. ஈராக் தலைநகரான பக்தாத்திற்கும் மேற்குப் பகுதியில் உள்ள ரமடி நகரத்திற்கும் இடையே லொறிகளை ஓட்டிச் சென்று கொண்டிருந்த சமயம் இவர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

கடத்திச் செல்லப்பட்ட இடம் குறித்து தகவல் எதுவும் வெளியாகவில்லை.

இவர்கள் ஓட்டிச் சென்ற லொறிகளும் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. (உ)



அம்பாலா-ஷாம்பு இடையேயான ரயில் தண்டவாளத்தின் பாலம் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டு தண்டவாளம் மட்டும் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் காட்சி.

## WORLD NEWS உலக தரிசனம்


# புஷ்ஷின் பதவி ஆசை புஸ்வாணம் முஸ்லிம்களின் முழு ஆதரவு ஹெரிக்கு


(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எதிராக அந்நாட்டில் வசிக்கும் முஸ்லிம்கள் வாக்களிக்கவுள்ளனர்.

தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கை என்ற பெயரில் முஸ்லிம்களைத் துன்புறுத்தல், ஈராக் மீதான தேவையற்ற போர் ஆகியவற்றால் புஷ்மீது முஸ்லீம்கள் வெறுப்படைந்து உள்ளனர்.

அமெரிக்காவில் நவம்பர் மாதம் நடைபெறும் அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும் ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோன் கெரியும் போட்டியிடுகின்றனர். தேர்தல் கருத்துக் கணிப்பு கெரிக்கு ஆதரவாகவுள்ளது. அமெரிக்காவில் 70 இலட்சம் முஸ்லிம்கள் உள்ளனர். இவர் களில் 30 இலட்சம் பேர் வாக்களிக்கும் தகுதி பெற்றவர்கள். ஆனால் இவர்களில் 60 சதவீதம் பேர் மட்டுமே வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். எனவே, தேர்தலில் வாக்களிக்கப் போகிற முஸ்லிம்களின் எண்ணிக்கை 16 இலட்சமாகவே இருக்கும். கடந்த தேர்தலில் புஷ் ஷுக்கு விருப்பு வாக்களித்த முஸ்லிம்கள், இம்முறை அவர் மீது கடுமையான கோபத்தில் உள்ளனர்.





புளோரிடா, மிச்சிக்கன், ஓக் கியோ, பென்சில்வேனியா மாகாணங்களில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புக்களின் அடிப்படையில் 51 சதவீத முஸ்லிம்கள் கெரிக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாக கூறியுள்ளனர். 24 சதவீதம் பேர் மட்டுமே புஷ்ஷுக்கு ஆதரவு தெரிவுள்ளனர். 17 சதவீதம் பேர் சுயேட்சை வேட்பாளரான ரால்ப் நாடெருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

(உ)

# ஷரபோவா அதிர்ச்சித் தோல்வி வேராஸ்வோனரேவா வெற்றி

விம்பள்டன் சாம்பியனான மரிய ஷரபோவா மான்ட்ரியல் டென்னிஸ் தொடரில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். மான்ட்



ரியல் டென்னிஸ் போட டிகள் கனடாவில் உள்ள மான்ட் ரியல் நகரில் நடந்து வருகினறது.இதில் கடந்த வியாழனன்று காலிறுதி க்கு முந்தைய சுற்றுப் போட்டிகள் நடந்தன. இதில் விம்பிள்டன் சாம்பியனான மரிய ஷரபோவா அதிர்ச்சி தோல்வி அடைந்தார். ரஷ்ய வீராங்கனையான இவரை 4-6,6-4, 6-4 என்ற செட்களில் சக வீராங் கனையான வேரா ஸ்வோனரேவா தோற்கடித்தா. இந்த வெற்றி மூலம் ஸ்வோனரேவா காலிறு திக்கு தகுதி பெற்றார். (உ)

# விளையாட்டு செய்திகள்

ATHENS 2004
XXVIII OLYMPICS 13-29 AUGUST

ஒலிம்பிக்கிற்கு இன்னும் 5 தினங்கள்


# டென்னிஸ் தொடர் ரோடிக் அபாரம்

மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு அமெரிக்காவின் ஆந்திரே அகாசி, ரோடிக் இருவரும் தகுதி பெற்றுள்ளனர். அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் மாஸ் டர்ஸ் டென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில்



கடந்த வியாழனன்று முந்தைய சுற்றுப் போட்டிகள் நடந்த போது நடப்புச் சாம்பியனான அமெரிக்காவின் ஆன்டி ரோடிக் 6-2,6-3 என்ற நேர் செட்களில் தாய்லாந்தின் பாரடான் ஸ்ரீசாய்பனை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு அமெரிக்க வீரரான ஆந்திரே அகாசி 6-3,6-3, என்ற செற்களில் ஜுவான் இக்னசியோ சேலாவையும், ஸ்பெயின் வீரர் கார் லோஸ் மோயா 7-6(5),4-6.7-6(5) என்ற செட்களில் வேய்னே ஆர்தர்சையும், ஆஸ் திரேலியாவின் லேடன் ஹெ விட் 6-1,6-4 என்ற செட்களில் பிரிட்டன் வீரர்டிம் ஹென்மேனையும், ரஷ்ய வீரர் மாரட் சாபன் 7-6,6-7, 6-4 என்ற செட்களில் குரோ ஷியாவின் இவோ கார்லோவிக்கையும், பிரான்சின் பேப்ரி ஸ்சான்ட்ரோ 6-0,6-3 என்ற செட்களில் ஜோனஸ் ஜோர்க் மேனை யும், ஸ்பெயினை சேர்ந்த டாமிராப்ர டோ 7-6,7-6 என்ற செட்களில் பிரிட்டன் வீரர் கிரேக்ருசெட்ஸ்கியையும் வீழ்த்தி காலி றுதிக்கு தகுதி பெற்றனர். (உ)



நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் அவுஸ்திரேலியர் குழுவுக்கான தெரிவுப் போட்டியில் வெற்றி பெற்ற இறான்ட் ஹாக்கெற் போட்டியின் போது...

# காலிறுதியில் பயஸ், பூபதி


அமெரிக்காவில் உள்ள சின்சினாட்டி நகரில் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டிகள் நடக் கின்றன. காலிறுதிக்கு முந்தைய சுற்றுப் போட்டிகளில் எட்டாம நிலை ஜோடியான இந்தியாவின லியான்டாப் பயஸ், மகேஸ்பூபதி, செக் குடியரசின் லியோஸ்பரிடல, பரான்டிசெக் செர்மாக ஜோடியை எதிர்த்து விளையாடியது.

மிகவும் விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் 6-7(6/8) என்ற கணக்கில் இந்திய வீரர்கள் முதல் செற்றை இழந்தனர். பின்னர் சுதாகரித்து விளையாடிய இவர்கள் 7-6(7/4),7-5 என்ற செற் கணக்கில் வென்றனர். (உ)

## போத்தம் வீட்டில் திருட்டு

முன்னாள் இங்கிலாந்து கிரிக்கெட் ஜாம்பவான் இயான் போததம வீட்டிலிருந்து ரூ.53 லட்சம் மதிப்புள்ள நவரத்தினங்கள் திருட்டுப் போயுள்ளன.

வடக்கு யார்க்ஷையரில் உள்ள ரேவன்ஸ்வொர்த் கிராமத்தில் அவரது பண்ணை வீடு உள்ளது. அங்கு கடந்த மாதம் 23ஆம் திகதி நடைபெற்ற விருந்தளிப்பின் போது இத்திருட்டு நடைபெற்றுள்ளதாக 'திசன்' செய்தி வெளியிட்டுள்ளது. (உ)



லொஸ்ஏன்ஜலில் நடைபெற்ற மோடோ எக்ஸ் தந்திர விளையாட்டுப் போட்டியில் மோட்டார்சைக்கிள் சாகஸ செயல் புரியும் கெனிபாட்டம்.

## ஒலிம்பிக் டைரி–துப்பாக்கி சுடுதல்

1996 எதென்ஸில் நடைபெற்ற நவீன ஒலிம்பிக்கில் இடம் பெற்ற 9விளையாட்டுகளில் ஒன்று துப்பாக்கிச் சுடுதல். அதுமட்டுமல்ல, அதிகமான போட்டியாளர்கள் இடம் பெற்றதும் இவ்விளையாட்டில் தான்.

அடுத்த 4 ஆண்டுகளில் பாரீஸில் நடைபெற்ற போட்டியில், உயிருள்ள புறாக்களை பறக்க விட்டு சுடுவதையே போட்டியாகக் கொண்டுள்ளனர்.

பண்டைய கிரேக்கர்கள் தங்களது கடவுளுக்கு, படைக்கும் வேண்டுதலாகவும் அப்போது இதைக் கொண்டுள்ளனர்.

அந்த ஒரே போட்டியில் மட்டுமே வேண்டுமென்றே பறவைகள் சுட்டுக் கொல்லப்பட்டன.

92இல நடைபெற்ற போட்டியில் 50மீற்றர் தூரம் கைத்துப்பாக்கியால் சுடும் போட்டியில் தங்கம் வென்ற லுகாஷிக்கு வெறும் 17 வயது தான்.அதே சமயம் இரண்டாம் இடம் பெற்ற ஸ்கானாகருக்கு 58 வயது. (உ





ஸ்கட்போட் பிக் எயர் போட்டியில் மோட்டார் சைக்கிள் சாகசவிளையாட்டுக்கள் மூலம் கூட்டத்தைப் பிரமிப்புக்குள் ஆழ்த்திய சாகச விளையாட்டு வீரர் ஜாசன் எலிஸ்.

## விளையாட்டு விழா

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று பி.ப 2.00 மணிக்கு நிலைய முன்றலில் இடம் பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவ்ர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லோ.யோகராஜா மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் ஆர். இராசதுரை ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-79)

# அஞ்சுவுக்கு அரிய கௌரவம் மல்லீஸ்வரிக்கு மனக்கசப்பு

(எதென்ஸ்)

எதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்திய மூவர்ணக் கொடியை ஏந்திச் செல்லும் அரிய வாய்ப்பை அஞ்சுஜாஜ் பெறவுள்ளார்.



கிரிஸ் தலைநகர் எதென்சில் வரும் 13 இல் ஒலிம்பிக் போட்டி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடக்க விழா அணி வகுப்பில் இந்தியக் கொடிய்யை யார் ஏந்திச் செல்வது என்பது குறித்து பெரும் விவாதம் நடந்து வந்தது.

இறுதியில் பதக்கம் வெல்லும் வாய்ப்பு அதிகம் உள்ள அஞ்சுவை தேர்வு செய்ததாக இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் சுரேஷ் கல்மாடி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

நீளம் தாண்டுதலில் உலகின் 4ஆம் நிலை வீராங்கனையாகக் திகழும் அஞ்சு, 2003 இல் பாரிசில் நடந்த உலகத் தடகள சாம்பயன்ஷிப் போட்டியில் வெண்கலம் வென்றார். இதன் மூலம் பதக்கம் பெறும் முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை படைத்தார்.

இந்தியக் கொடியை ஏந்திச் செல்லும் கௌரவம் அஞ்சு வுக்கு அளிக்கப்பட்டது. இதற்கு 1999, அட்லாண்டா ஒலிம்பிக்கில் இவர் வெண்கலம் வென்றதே முக்கிய காரணம்.

இதே அடிப்படையில் 2000, சிட்னி ஒலிம்பிக் பளுதூக்குதலில் வெண்கலம் வென்ற மல்லீஸ்வரிக்கு, இம் முறை கொடிஏந்தி செல்லும் பெருமை அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டதே இந்தக் சர்ச்சைக்குக் காரணமாகும்.

# ஆர்.பி.ஜி. படைப்பிரிவுப் பயிற்சி
# நிறைவு நிகழ்வில் பிரபா பங்கேற்பு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் விசேட உந்துகணை செலுத்திப் படைப் பிரிவின ஒரு தொகுதியினர் நேற்று



முன்தினம் தமது விசேட பயிற்சிகளை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நிறைவு செய்துள்ளனர். இந்நிகழ்வில் தமிழீழத் தேசியத்தலைவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

ஆரம்ப நிகழ்வாக பான்ட் வாத்திய அணியினர் இசைக்க விசேட உந்துகணை செலுத்திப் படைப்பிரிவினரின் அணிவகுப்பு நடைபெற்றது. இதனை தமிழீழத் தேசியத்தலைவரும் வடபோர் முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன், இரண்டாம் லெப்ரினன்ட் மாலதி படையணியின் விசேட தளபதி கேணல் விதுசா ஆகியோர் ஏற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து பயிற்சிகளை நிறைவு செய்த படையணியினருக்கான சான்றிதழ்களையும், சிறப்புப் பரிசில்களையும் தமிழீழத் தேசியத்தலைவர் வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியத தலைவர் உரையாற்றும் போது, அரச படைகள் கவசப் படையணியை உருவாக்கி யிருந்தமையும் அதனை, ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது பயன்படுத்த இருந்தமையுமே இவ்வாறான ஒரு படையணியை விசேடமாக உருவாக்க நான் எண்ணியமைக்கக் காரணமாகும்.

அதுபோன்றே இப்படையணி ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின்போது எதிரியின் கவச படையணியின் முன்னேற்ற முயற்சிகள் பலவற்றை முறியடித்து பல வெற்றிகளைப் பெற்று சாதனை படைத்தமை நினைவு கூறத்தக்கது.

அரச படைகளுக்கு இவ் உந்துகணை செலுத்திகளை அறிமுகப்படுத்தியவர்கள் புலிகளே. புலிகள் உந்துகணை செலுத்திகளை பயன்படுத்துவதை அறிந்த பின்னரே அரச படைகள் தமது படையணிகளில் இவற்றினை இணைத்துக் கொண்டனர் என்றார். (உ-க)

## வேளாண் நூல்களின் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

விவசாய பீடாதிபதி க.இராசதுரையின் 'வேளாண் நூல்களின் அறிமுகவிழா எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞான சுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரைகளை செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன், வண பிதா ஏ.ஜே.பேர்னாட் ஆகியோரும் அறிமுக உரையை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாசும் நிகழ்த்தவுள்ளனர்.

வாழ்த்துரைகளை யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் எஸ். இரவீந்திரநாத் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூலின் விமர்சன உரைகளை கலாநிதி திருமதி சி.சிவமதி, உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை, சிரேஷ்ட விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஜே. அரசகேசரி, பேராசிரியர் எஸ்.வி. பரமேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (உ-7)

## வடமராட்சி கிழக்கில்
# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விரைவில் மின்சார விநியோகம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு விரைவில் மின்சாரம் வழங்குவதற்கு ஏற்ற வகையில் இலங்கை மின்சாரசபை தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனையடுத்து மின்சாரத்தை வழங்குமாறு அப்பகுதிப் பொது அமைப்புகள் பலவும் இலங்கை மின்சாரசபையிடம் கோரிக்கைகளை முன்வைத்திருந்தன.

இந்நிலையில் தற்போது முதற்கட்டமாக அம்பன் மற்றும் குடத்தனைப் பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கேற்ற வகையில் மின்சாரசபை நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

இதன் அடுத்தகட்டமாக வடமராட்சி கிழக்கிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான மருதங்கேணி, செம்பியன்பற்று, மாமுனை மற்றும் தாளையடி ஆகிய இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது. (உ-35,43)

# இந்து சமுத்திர நாடுகளின் அமைச்சரவைக் கூட்டம்
## இலங்கையில் இருதினங்கள்

(கொழும்பு)

பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்துசமுத்திர நாடுகள் சங்கத்தின் 5வது அமைச்சரவைக் கூட்டம் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெறவுள்ளது.

அமைசசர் மட்டக் கூட்டத்துக்கு முன்னதாக இந்துசமுத்திர நாடுகளின் கல்விமான்கள் குழுக் கூட்டம் இந்துசமுத்திர நாடுகளின் வர்த்தகக் கருத்தரங்கு என்பனவும் இலங்கையில் நடைபெறவுள்ளன.

இலங்கை, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், இந்தோனேசியா , ஈரான், கென்ஜா, மடகஸ்கார், மலேசியா, மொறீசியஸ், மொசாம்பிக், ஓமான், இந்தியா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா உட்பட 18 நாடுகள் இந்தச் சங்கத்தில் அங்கம் வகிப்பதுடன் இந்தச் சங்கத்திற்கு தற்போது இலங்கையே தலைமை வகித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (உ, க -60)

## அரச படைகளின் தகுதியை அமெ. உறுதி செய்தது

இரண்டு தசாப்த காலத்தில் விடுதலைப்புலிகளுடன் போரிட்டு நல்ல பயிற்சியும் அனுபவமும் பெறறுள்ள சிறிலங்கா இராணுவத்திலிருந்து சிலர் வெளிநாட்டு இராணுவத்திற்கு பயிற்சி வழங்கும் தகுதியைப் பெற்றிருப்பதாக ஐ.நா.வின் அமைதிகாக்கும் படைப்பிரிவினர் நடத்திய தேர்வின் முடிவில் தெரி விக்கப்பட்டுள்ளது. (உ,க)

# கோவையில் வெடிகுண்டு வதந்தி

வெடி குண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாகப் பரவிய வதந்தி காரணமாக கோவை மாநகரிலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் நேற்று முன்தினம் விடுமுறை விடப்பட்டது.

வதந்தி பரவியதும் பெற்றோர் பதறியடிதததுக் கொண்டு பள்ளிக்குச் சென்று பிள்ளைகளை அழைத்துச் சென்றனர்.


கோவை தரனூர் பள்ளிப் பகுதியிலுள்ள தனியார் மெற்றிகுலேஷன் பள்ளியொன்றில் வெடி குண்டு வைக்கப்பட்டிருப்பதாக நேற்றுமுன்தினம் காலை மர்ம தொலைபேசி அழைப்பொன்று வந்ததையடுத்து அப்பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

இத்தகவல் கோவை முழுவதும் பரவியதால், பெற்றோர் அலறியடித்துக் கொண்டு எல்லாப் பள்ளிகளுக்கும் சென்று தமது பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்புமாறு முற்றுகையிட்டனர்.

இதனால் மதியம் 12 மணியளவில் மாநகரிலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் விடுமுறை விடப்பட்டது.

இதனிடையே கோவையில் நல்லூர் காவல் நிலையம் முன் கேட்பாரற்றுக் கிடந்த 2 நாட்டுத் துப்பாக்கிகள் மற்றும் 17 தோட்டாக்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவை தீவிரவாதிகள் வீசிச் சென்றவையா என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (து)



இந்தியப் பாதுகாப்புச் செயலர் அஜய் விக்ரம சிங்கை, பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலர் ஹமீட் நவாஸ் கான் புதுடில்லியில் சந்தித்துப் பேசினார்.

# இந்தியச் செய்திகள்

# ஜெயலலிதாவின் தில்லு முல்லு கருணாநிதி விளக்கம்

(சென்னை)

காவிரி டெல்டா விவசாயிகளைப் பழிவாங்க வேண்டுமென்பதற்காகவே மேட்டூர் அணையைத் திறக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா மறுப்பதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பான கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அவர்,தி.மு.க. ஆட்சியில் 50.75 அடி அளவுக்கு மேட்டூர் அணையில் நீர்மட்டம் இருந்த போது விவசாயிகளின் நலன்கருதித் தண்ணீர் திறந்து விடபபட்டதை நினைவு கூர்ந்துள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு நீர் மட்டம் 64.94 அடியாக இருந்த போது தண்ணீர் திறந்துவிட்ட ஜெயலலிதா இப்பொழுது 72 அடிக்கும் அதிகமாக நீர்மட்டம் இருந்தும் தண்ணீர் திறந்துவிட அவர் மறுப்பதாக கருணாநிதி குறை கூறியுள்ளார்.

சென்னையைக் காப்பது புதிய வீராணம் திட்டம் என்று ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கை பற்றிய கேள்விக்கும் கருணாநிதி பதிலளித்தார்.

வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவர 720 கோடி ரூபாய்க்குக் குழாய்களைப் பதித்து விட்டு, தான் எடுத்த நிலை தவறாகிவிட்டதாகப் பழிவந்துவிடுமோ என்பதற்காக நெய்வேலக்கு அருகே ஆழ்குழாய்க் கிணறுகளைத் தோன்டி, அந்தத் தண்ணீரை புதிய வீராணம் திட்டத்தின் மூலம் கிடைத்ததாகக் கூறி ஜெயலலிதா தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார் என்று கருணாநிதி குற்றஞ்சாட்டினார். (து)




இந்தியப் பருத்தி ஆலைகள் கூட்டமைப்பின் சார்பில் தயாரிக்கப்பட்ட ஜவுளி தொழிலுக்கான இலக்கு அறிக்கையை டெல்லியில் நேற்று முன்தினம் வெளியிட்டார் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம்.

# நீதிபதி வீட்டில் கொள்ளை

பெரம்பலூரில் நீதிபதியொருவர் வீட்டில நடந்த கொள்ளைச் சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெரம்பலூர் நீதிமன்ற நீதிபதியாக இருக்கும் சாரங்கபாணி என்பவர்து வீட்டுக்குள் நேற்றுமுன்தினம் அதிகாலை புகுந்த மர்மநபர்கள் ஒன்றரை இலட்சம் ரூபா மதிப்புள்ள, தங்க நகை, மற்றும் பொருட்களை கொள்ளையடித்துள்ளனர்.

இக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளவர்களைப் பிடிக்கத் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர். (து)

# ஆயிரம் ரூபாய் நோட்டில் தஞ்சை பெரிய கோயில்

(தஞ்சாவூர்)

1954 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆயிரம் ரூபாய் நோட்டில் தஞ்சாவூர் பெரியகோயில் அச்சிடப்பட்டுள்ளது.




சென்னை, கொல்கத்தா, டில்லி, மும்பை, கான்பூரில் அரசு நாணய அச்சுக்கூடங்களில் இந்த ரூபாய் அச்சிடப்பட்டது. நோட்டின் நீளம் 8 அங்குலம், அகலம் 5 அங்குலம்.

தஞ்சாவூர் மேக்ஸ்வெல் மெட்ரிக் பள்ளியில் நடைபெறும் நாணயவியல் கண்காட்சியில் இது காட்சிக்கு வைக்கப்படுகிறது என்று சோழ மண்டல நாணயவியல் கழகத்தலைவர் மு.துரைராசு தெரிவித்துள்ளார். (து)

# இறைவனின் வார்த்தைகளைக் கேடயமாக்கி நற்செயல்களுக்கு உயிர்ப்பளிப்போம்

ஆண்டவருக்கு அஞ்சுவதால் நீங்கள் அவர் இரக்கத்தை அடை



வீர்கள். நன்னறி வழுவாதபடி அவரை மறவாதீர்கள். இவ்வுலக வாழ்க்கையிலே பொய்மைகள் உண்மைகள் போலவும் பொய்மை யாளன் நீதியாளன் போலவும் வேசம் போட்டு ஊரை ஏமாற்று கின்றான். ஏழைகள் நசுக்கப்படு கின்றார்கள். நீதிமான்கள் போல் காட்சி தருபவர்கள் உள்ளுக் குள்ளே அகத்தூய்மை அற்றவர் களாக கோடிக் கௌரவம் தேடு கிறார்கள். 'உன் ஆன்மாவை முன்னிட்டு நீதிக்காகத் துன்பப்படு, சாகும் வரையிலும் நீதிக்காகப் போராடு. கடவுளும் உனக்காக உன் பகைவரை எதிர்த்து வெல்வார்' (சீராக் : 4:33) எனவே நாம் மிகவும் எச்சரிக்கையோடு வாழ வேண்டி யவர்களாக இருக்கிறோம்.

### ஞானத்தின் ஆரம்பம்

நான் தேர்ந்து கொண்ட வாழ் வுக்கு நான் பிரமாணிக்கமாக வாழ முடியாவிட்டால் நாம் வாழ்ந்தும் பயனில்லை. நாங்கள் ஒவ்வொரு வரும் வெளிப்படையாகச் சான்று பகரவேண்டும். இல்லையே நீதி இருக்கைமுன் வெக்கித் தலை' குனிவோம்.

## பரமபிதா காட்டியபாதை

'உடலைக் கொன்றபின் அதற்குமேல் ஒன்றும் செய்ய இய லாதவர்களுக்கு அஞ்சாதீர்கள்... கொன்ற பின் நரகத்தில் வீழ்த்த வும் வல்லவருக்கு அஞ்சுங்கள்' (லூக் : 12:4,5) என்று ஆண்டவர் இயேசு தாமே கூறி வைத்துள்ளார்.

இன்றைய தொடர்பு சாதனங் கள் போலி இன்பத்தில் வீழ்த்த வல்லவைகளாக இருப்பதனால் அநேக நீதிமான்கள், வழிகாட்டிகள், ஆன்மீக வாதிகள் கூட இவ் வஞ் சக வலையிலே அகப்பட்டு விட்டார் கள். இவற்றுக்கே முக்கியத்துவம் கொடுப்பதால் தேர்ந்து கொண்ட வாழ்வின் அர்த்தங்கள் பொருள் அற்றவைகளாக மாறிவிடுகின்றன.

### வெளிப்படையான சான்று

ஒருவனுடைய வாழ்வு அவனது இறப்பிலே தெரியும் என்பார்கள். உலகத்தை ஆதாயமாக்கிக் கொணடவர்களுக்கே இது அதிகம் பொருந்துவதாகும். ஆன்மாவுக்கு கேடு விளைவிக்காமல் நாம் நடக்க வேண்டுமானால் போலிகளை நம் மிடமிருந்து அகற்றிப்போடவேண் டும். நெஞ்சுக்குத் துரோகம் செய் யாமல் கருமங்களை ஆற்றவேண் டும். 'நான் உங்களுக்குச் சொல் கிறேன் மனிதர் முன் என்னை வெளிப்படையாக ஏற்றுக்கொள் பவ்ன் எவனோ அவனை மனுமக னும் கடவுளின் தூதர்கள் முன் வெளிப்படையாக ஏற்றுக்கொள் வார்' மறுதலிப்பவர்...? (லூக் : 12:8) இந்நிலையில் எம் வாழ்வை மீண்டும் சிந்திக்கவேண்டியவர் களாக இருக்கின்றோம்.

நாம் ஆயிரம் நன்மை செய் தாலும் வேண்டும் என்று செய்யும் ஒரு தீமையினால் எமது நன்மை கள் கேள்விக்குறியாகிவிடும். எனவே ஆண்டவரின் அருளின் துணை யோடே நாம் எல்லாவற்றையும் மேற கொள்ளவேண்டும். எதை உண்பது, எதைக் குடிப்பது, எதை உடுப்பது என்று கவலைப்படாமல் 'கடவுளின் அரசையே முதலில் தேடுங்கள்' (லூக் 12: 31) மற்ற வையெல்லாம் இறைவன எமக்கு அளிப்பான் என்று ஏற்று வாழ் வதே மீட்படைவதற்கு வழியாகும்.

### விண்ணரசுக்குரிய வாழ்வாக்க

மீட்கப்பட்ட எமது வாழ்வு உயி ரோட்டமுள்ள வாழ்வாக அமைய வேண்டும். இவ்வுலகில் உள்ள வற்றின் மீது மனத்தைச் செலுத் தாமல் மேலுலகில் உள்ளவற் றையே நாடுங்கள் அங்கே தான் கிறிஸ்து கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்திருக்கிறார். கிறிஸ்துவை முகமுகமாய் தரிசிக்கும் பேற்றுக் காகவே நாம் எம்மைத் தயார் படுத்தவேண்டும். வாழும் ஒவ் வொரு கணப்பொழுதும் நன்மை செய்வதையே கருத்தாகக் கொள்ள வேண்டும். அரச குருத்துவத் திருக்கூட்டம், பரிசுத்த குலம் இறைவனுக்குச் சொந்தமான மக் கள் என்று பெருமைப்படும். நாம் அத்தகைய வாழ்வுக்குத் தகுதி யுள்ளவர்களாக வாழ முறபட வேண்டும். நற்செய்தி கூறுகின்ற வழிமுறைகளைக் கைக்கொண்டு உண்மைக்குச் சான்றுரைக்க வேண்டும்.

யாவற்றுக்கும் மேலாக ஆண்ட வரின் திருவுல விருப்பம் யாதென்று

**அமல அருள்தாசன்**

அறிந்து வாழப் பழகுவோமானால் இறைவனிடமிருந்து நாம் ஏராள மான அருள் வரங்களைச் சுவீக ரித்துக் கொள்ளலாம். இறை வனின் வார்த்தைகளைக் கேடய மாகக் கொண்டு நற்செய்தி விழு மியங்களுக்கு உயிரோட்டம் கொடுக்கும் வாழ்வை மேற் கொண்டு விண்ணரசுக்குரிய செல்வங்களைச் சேகரித்து எம் வாழ்வை இறைவனுக்கு உகந்த வாழ்வாக மாற்றியமைப்போம். □

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

அரசாங்க மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாட சாலைகளின் ஆசிரியர்களை இலங்கை பல்கலைக்கழ்கங்க ளுக்கு அனுமதிப்பதற்காகத் தகுதியானோரிடமிருந்து கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2004 / 2005 ஆம் கல்வியாண் டில் குறிப்பிட்ட பாடநெறிகளைத் தொடர்வதற்கு இலங்கைப் பல் கலைக்கழகங்களில் அனுமதிப் பதற்காக ஆங்கில பாடத்துடன், கலை, விஞ்ஞானத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில் சித்தி யடைந்த மேற்படி பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்காக விண்ணப்பிக்கவுள்ள ஆசிரியர்கள், 5 வருட சேவையில் நிரந்தர நியமனம் பெற்றிருப்பது டன், ஆசிரிய பயிற்சிக் கல்லூரி, கல்வியியற் கல்லூரி, பல்கலைக் கழகம் மற்றும் தேசியக் கல்வி நிறுவனம் ஆகியவற்றில் பாடநெறி களைத் தொடர்வதற்காகப் பதிவு செய்யாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், கல்வி அமைச்சு, 'இசுருபாய' பத்தரமுல்ல' எனும முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-ற)

## பரீட்சை ஆயத்தங்கள்

(கோப்பாய்)

எதிர்வரும் 15 ஆம் திகதி நடை பெறவுள்ள தரம் 5மாணவர்களுக் கான புலமைப்பரிசில் பரீட்சைக் கான வரவு இடாப்பு, நேரசூசி ஆகி யவை பரீட்சைத்திணைக்களத் தால் பாடசாலைகளுக்கு அனுப் வைக் கப்பட்டுள்ளன. (உ-79)

## தேவாலயங்களைப் புனரமைக்க பெருமளவு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வடகிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்த கிறிஸ்தவ தேவாலயங்களைப் புனர மைப்புச் செய்வதற்கு அமைச்சரவை நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த இரு தசாப்த காலமாக இடம்பெற்று வந்த யுத்தத்தினால், வட பகுதியில் கிறிஸ்தவ தேவா லயங்கள் பெரிதும் அழிவுக்குள்ளா கியமையைச் சுட்டிக்காட்டி, இவற் றைப் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கு மாறு கிறிஸ்தவ சமயவிவகார அலுவல்கள் அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ அமைச்சரவையிடம் விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்நிதி கைக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட இந் நிதியிலிருந்து யாழ்ப்பாணம் திருமாதா தேவால யத்திற்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், கிளிநொச்சி புனித அந் தோனியார் தேவாலயத்திற்கு 7 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவும், முல்லைத்தீவு புனித மரியாள் தேவாலயத்திற்கு 17 இலட்சம் ரூபாவும், வவுனியா புனித அந்தோ னியார் ஆலயத்திற்கு 7 இலட்சம் ரூபாவும், மன்னார் புனித ஜேம்ஸ் தேவாலயத்திற்கு 9 இலட்சம் ரூபா வும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இந் நிதி அனைத்தும் இன்னும் சில தினங்களில் சம்பந்தப்பட்ட தேவாலயங்களுக்குக் கிடைக்குமென அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (உ-ற)

## அரசின் 1வ்து வரவு செலவுத்திட்டம் நவம்பரில் சமர்ப்பிக்கப்படும்

### அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி அரசின் வரவு செலவுத்திட்ட அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்படும் என வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் இத னைத் தெரிவித்தார்.

அரச ஊழியர்களின் சம்பள உயர்வு, வரிக்குறைப்பு, இறக்கு மதிப் பொருட்களின் விலைக் குறைப்பு, வேலைவாய்ப்பு வழங் கல் உட்பட மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் பல இவ் வரவு செலவுத்திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

அத்துடன், அரசதுறை வேலை வாய்ப்புக்களுக்கு முன்னைய காலங்களைவிட அதிகளவானோர் உள்வாங்கப்படும் திட்டமும் இதில் அடங்கும் எனவும் ஜெயராஜ் பெர் னாண்டோபுள்ளே தெரிவித்துள் ளார்.

கடந்த கால யுத்த அனர்த்தங் களால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் அபிவிருத்தி, பொருளாதாரம், கல்வி மேம்பாடு என்பவற்றினை கவனத்தில் கொண்டே இவ் வரவு செலவுத்திட்ட அறிக்கை தயாரிக் கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ,ப - 64)

## மிதிவெடி அபாயப் பலகைகள் மாயம் பொதுமக்களுக்கு உருவாகிறது பேரபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி களை அகற்றும் பொருட்டும், அதன் பாதிப்பில் இருந்து மக்களை மீட்கும் பொருட்டும் நாட்டப்படும் மிதிவெடி அபாயப் பலகைகளை சிலர் பிடுங்கிச் சென்று விடுவதாக வும் வேறு சிலர் விஷமத்தனமாக அவற்றை அவசியமற்ற வேறிடங் களில் நாட்டி விடுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால், உண்மையில் மிதி வெடி அபாயம் உள்ள இடங்களை இனங்காண்பதில் மக்களும் மிதி வெடி அகற்றும் பணியில் ஈடுபட் டுள்ளவர்களும் சிரமங்களை எதிர் கொள்வதுடன், இதுவிடயம் மிதி வெடி அகற்றும் பணியில் தாமதம் ஏற்படக் காரணமாக அமைவதாக வும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை, மிதிவெடி அகற் றுவதற்கென இனம்காணப்பட்டு அதனை அகற்றுவதற்கு வசதியாக நடப்படும் அடையாளக் கட்டை களும் பல இடங்களில் மாயமாக மறைந்துவிடுவதாக இப் பணியில் ஈடுபடுவர்கள் மனவருத்தத்துடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் பணியில் வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் படையின ரின் கண்ணிவெடி அகற்றும் பிரிவு ஆகியன ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-19)

## கட்டாய மதமாற்ற தடைச் சட்டமூலம் தொடர்பில் நீதிபதிகள் குழு கூடி ஆராய்வு

(கொழும்பு)

கட்டாய மதமாற்றத்தடைச் சட்டமூலம் தொடர்பாக, மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ரி.பி வீரசூரிய தலைமையிலான 3 நீதி பதிகளைக் கொண்ட குழுவினர் நேறறு முன்தினம் ஆராய்ந்துள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பின ரான பேராசிரியர் சோபித தேரர் சமர்ப்பித்த கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 46 மனுக் களில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங் கள் தொடர்பாகவே மேன்முறை யீட்டு நீதிமன்ற நீதிபதிகள் இந்தச் சட்டமூலத்தை விரிவாக ஆராய்ந் துள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமய உறுப் பினர் ஒருவரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 46 மனுக் களில், 26 மனுக்கள் இந்தச் சட்ட மூலம் அரசியல் யாப்பு விதிகளுக்கு உட்பட்டதல்லவென்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் பாராளு மன்றத்தல் நிறைவேற்றப்படுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்படவேண்டும் அல்லது சர்வ ஜன வாக்கெடுப்பின் மூலம் அங்கீ கரிப்படவேண்டுமென்று அந்த மனுக்களை தாக்கல் செய்துள்ள மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். (உ-8)

## இந்து சமுத்திர ஒத்துழைப்பு அமைச்சர் மாநாடு கொழும்பில்

(கொழும்பு)

இந்து சமுத்திர பிராந்திய ஒத் துழைப்பு சுற்றுவட்ட அமைப்பின் அமைச்சர்களது மாநாடு எதிர் வரும் 21 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் இடம்பெறவுள்ள இம்மாநாட்டில் தெற்கு ஆசிய பிரா்ந்தியம் உட்பட்ட நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ச்சியாக 5 நாட்களுக்கு இடம்பெறும் இம்மாநாட்டில் இந்து சமுத்திரபபிராந்திய நாடுகளிடையே யான அரசியல், பொருளாதார இராணுவ உறவுகளைப் பேணுதல் மற்றும் இந்து சமுத்திர எல்லை களைப் பாதுகாத்தல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இதன் முடிவில் இந்துசமுத்திர பிராந்திய நாடுகளின் பாதுகாப்பு கள் மற்றும் ஒத்துழைப்புகள் என் பன குறித்த முக்கிய தீர்மானங் களும் எடுக்கப்படும் என வெளி விவகார அமைச்சு செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. (உ,ப-62)

## வலி.கிழக்கு விவசாய சம்மேளன செயற்பாடுகளில் அதிகாரிகள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலா் பிரிவில ஆரம்பிக்கப்பட்ட விவசாய சம்மேளனஙகள் எதுவுமே ஆர்வத்துடனும் அககறையுடனும் செயற்படவிலலை என கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகளி னால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வலிகாமம் கிழககு பிரதேசத்தில் இருககின்ற விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலி யாளர்களின் தேவைகள் மற்றும் பிரச சினைகள் எதுவும் கவனிககப்படா மல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்த நிலை தொடருமாயின அனைத்து விவசாய சம்மேளனங் களையும் கலைத்து விட்டு புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்து இயங்கச செய்யப்படும் எனவும தெரியவருகின்றது. (உ-16)

யாழ்ப்பாணம்

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர் -குறள்

வலம்புரி

## தமிழக மீனவர்களின் அத்துமீறல் தொடர்கிறது

இலங்கையின் வடக்குக் கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் அத்துமீறல் தொடர்கதையாக நீடிக்கிறது.

இவ்வாறு தமிழக மீனவர்கள் வடக்குக் கடற்பரப்பில் நுழைந்து கடல்வளத்தை சூறையாடிச் செல்வதால் வடபகுதி மீனவர்கள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

தமிழக மீனவர்கள் ஈழத் தமிழர்களின் சகோதரர்கள் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. ஈழத் தமிழர்கள் துன்பப்பட்டபோது அதைக்கண்டு கிளர்ந்தெழுந்தவர்கள் தமிழக மக்கள். இதனை நாம் ஒருபோதும் மறந்துவிடமுடியாது.

ஆனால் கடற்தொழில் என்ற வகையில் தமக்கென வரையறுக்கப்பட்ட கடற்பரப்பிற்குள் தொழில் புரிவதே நீதியும் நியாயமுமானதாகும்.

இரு நாடுகளினால் வரையறை செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட கடல்எல்லையைத் தாண்டி தொழில்புரிவதில் எத்தரப்பு ஈடுபட்டாலும் அது குற்றமாகவே கருதப்படும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் கடந்த 20 வருடங்களாக ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடமுடியாது தடுக்கப்பட்டனர். கடல் வலயச் சட்டத்தை அமுல்படுத்தி அதன்மூலம் வடபகுதி மீனவர்களை கடலில் இறங்கவிடாது இலங்கை அரசு தடைசெய்தது.

இதனால் வடபகுதி மீனவர்கள் தமது சீவனோபாயத்திற்காக பட்ட கஷ்டங்கள் ஏராளம். சிறுகடலில் இறங்கி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதாக இருந்தால்கூட, உடுத்த ஆடையைக் கழற்றிவைக்க வேண்டிய நிலைமை இருந்தது. இவ்வாறு பல்வேறு துன்பங்களின் மத்தியில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையானது, வடபகுதி மீனவர்களின் கடற்தொழிலுக்கு சில நிபந்தனைகளுடன் அனுமதி கொடுத்தது.

கடந்த 20 வருடமாக ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடமுடியாமல் இருந்த வடபகுதி மீனவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெற்றபோது, அந்தோ தமிழக மீனவர்களின் அத்துமீறல் நிம்மதியைக் குழப்புவதாக உள்ளது.

வடபகுதிக் கடலில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் தமிழக மீனவர்கள் ஈடுபடுவதால் வடக்கு மீனவர்களின் கடற்தொழில் சாதனங்கள் அழிக்கப்படுவதுடன் அவர்கள் அச்ச உணர்வுடன் தொழிலில் ஈடுபடவேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனை தமிழக மீனவர்கள் சகோதர உணர்வுடன் புரிந்துகொள்ளவேண்டும். அதற்குள் இருக்கக்கூடிய சிங்களப் படைகளின் சதித் திட்டத்தை உணர்ந்துகொள்ளவேண்டும்.

வடபகுதியில் இருந்து தமிழகத்திற்கு சட்டவிரோதமாகச் செல்பவர்களையும், தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பும் ஈழத்தமிழ் அகதிகளையும் கண்டறிந்து கைதுசெய்யும் இலங்கைக் கடற்படைக்கு தமிழக மீனவர்களின் அத்துமீறல் கண்ணுக்குத் தெரியாமல் இருப்பது ஆச்சரியமான உண்மையாகும்.

தமிழக மீனவர்களை வடக்குக் கடலுக்குள் நுழைய விடுவதன் மூலம் சகோதர உறவுடைய இந்திய, ஈழத்தமிழர்கள் தமக்குள் மோதிக்கொள்வர். இதன்மூலம் தமிழினத்தின் பலத்தைக் குறைக்கமுடியும் என்பது இலங்கைப் படையின் திட்டம்.

இதற்கு பலியாகாமல் - ஏற்கனவே நடந்த கசப்பான சம்பவங்கள் மேலும் நடக்காமல் இருக்கக்கூடியவகையில் தமிழக மீனவர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

தமிழக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து வடபகுதி மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களை நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும். இது காலத்தின் அவசர தேவையாகும்.

# இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தெளிந்த நிலைப்பாடு ஜே.வி.பிக்கு இல்லை

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஜே.வி.பி. தெளிவான நிலைப்பாட்டுடன் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கா குற்றம்சாட்டியுள்ளார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார். அவர் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக ஜே.வி.பியின் உறுப்பினர்கள் முரண்பாடான கருத்துக்களை அவ்வப்போது வெளியிட்ட வண்ணம் இருக்கிறார்கள். ஜே.வி.பி. கடந்த சில வாரங்களாக இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக அரசுக்கு எச்சரிக்கை விடுத்து வருகிறது. அத்துடன் இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டால் அரசாங்கத்திலிருந்து உடனடியாக விலகப்போவதாகவும் எச்சரித்துள்ளது.

இருப்பினும் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடடில் ஜே.வி.பியின் விவசாய அமைச்சர் அனுர குமாரதிஸநாயக்க இதற்கு முற்றிலும் மாறான கருத்தை வெளியிட்டார்.

இந்த நிலைப்பாடு அரசியல் கட்சிகள் மத்தியில் காலத்துக்கு காலம் மாற்றம் அடையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (8)

# குற்றச் செயல்களை முற்றாக ஒழித்துக்கட்ட சட்டம், ஒழுங்கு அமைச்சு ஆலோசனை

(கொழும்பு)

பொலிஸ் சேவையில் அரசியல் செல்வாக்கைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

பொலிஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரிகளாகக் கடமையாற்றுவோர் தமது கடமைகளை நேர்மையுடன் மேற கொண்டால் நாட்டில் குற்றச்செயல்களை முற்றாக ஒழித்து விடமுடியும்.

பாலியல் சம்பந்தமான திரைப்படங்களையும் வன்முறைகளைச் சித்திரிக்கும் திரைப்படங்களையும் திரையிடுவதைப் பொலிஸார் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும்.

இத்தகைய படப் பிரதிகளை விற்பனை செய்யும் அல்லது வாடகைக்கு விடும் வர்த்தக நிலையங்களைக் கண்டு பிடித்து அதன் உரிமையாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிகைகை எடுக்கவேண்டும் என திலக்ரணவிராஜா மேலும் கேட்டுக்கொண்டார். (உ-க,60)

## மயானம் புனரமைப்பில்லை மக்கள் பெரும் சிரமம்

(கல்வியங்காடு)

இருபாலை கிழக்கு நொச்சிக்காடு இந்து மயானம் கடந்த இரு தசாப்தங்களாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருப்பதால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

3 கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்குப் பொதுவானது இந்த மயானமாகும். ஒரு நேரத்தில் ஒரு ஈமக்கிரியையை மட்டுமே செய்ய முடியும். அதற்கு மேற்பட்ட ஈமக்கிரியைகள் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் நேரத்தில மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் சுட்டிக்காட்டிய போதும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (உ-74)

## சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் தேசிய அ.அட்டை மோசடி விசாரணை

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் தேசிய அடையாள அட்டை மோசடி தொடர்பான விசாரணைகளுக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கோரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விரிவான அறிக்கையை இரகசியப் பொலிஸார் சட்டமா அதிபரிடம் நேற்றுமுன்தினம் கையளித்துள்ளனர்.

பதவி நீக்கப்பட்ட மேற்படி திணைக்கள ஆணையாளர் உட்பட 35 உத்தியோகத்தர்களை இரகசியப் பெரிஸார் விசாரணை செய்ததாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, பதவி நீக்கப்பட்ட ஆணையாளர் விஜயரணதுங்க தேசிய அடையாள அட்டை மோசடி சம்பந்தமான குற்றச்சாட்டினால் தாம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட முன்னரே தமக்கு பிணை வழங்க வேண்டும் எனக் கோரி நீதிமன்றில் தாக்கல் செய்த மனுத் தொடர்பாக நீதிமன்றம் நாளை திங்கட்கிழமை தீர்ப்பு வழங்கவுள்ளது. (உ-க,60)

## இடைக்கால நிர்வாகம் குறித்து ஒக்டோபரில் விவாதம்

தமிழீழ விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் தொடர்பான நாடாளுமன்ற விவாதம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவாதத்துக்கான அழைப்பை ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்திருந்ததையடுத்து, கடந்த மாதம் இந்த விவாதம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பின்னர் அது ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது, மீண்டும் ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருந்தனர். இதையடுத்து, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இடம்பெறும் நாடாளுமன்ற அமர்வுகளின் போது, 3 நாட்களுக்கு சபை ஒத்திவைப்பு வேளையில் இதுகுறித்து விவாதிக்க சபாநாயகர் சம்மதம் தெரிவித்துள்ளதாக நாடாளுமன்றச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஆரம்பக் கல்வி செயற்பட்டறை

(கோப்பாய்)

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட 7 பாடசாலைகளில் ஆரம்பக்கல்விச் செயற்பட்டறை வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ். உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழக்கலவன பாடசாலை,நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை, நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை, வண்ணை நாவலர் வித்தியாலயம், திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம்,சென் சாஸ்ஸ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இவ் கல்விச செயற்பாட்டறைகள் இடம்பெறவுள்ளன. (உ-79)

## பரஸ்பர ஒத்துழைப்புக்கு ஏதுவாக

# ஜாதிக ஹெல உறுமய அரசு இணைந்து இரகசிய புரிந்துணர்வு உடன்படிக்கை!

(கொழும்பு)

பௌத்த பிக்குகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள ஜாதிக ஹெல உறுமய விரைவில் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான ஒரு இரகசிய புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் விரைவில் செய்து கொள்ளப்படவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எதிர்க்கட்சிகளின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில்லையென ஏற்கனவே தெரிவித்திருந்த ஜாதிக ஹெல உறுமய, அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிக்கப் போவதாக கடந்த நாடாளுமன்ற அமர்வின் போது தெரிவித்திருந்தது.

இந்நிலையில், எதிர்க்கட்சிகளின் பெரும்பான்மைப் பலத்தை நாடாளுமன்றத்தில் நிரூபிக்கும் வகையில் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றின் பதவியை வாக்கெடுப்பிற்கு விடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்த போதும் அதற்கு ஜாதிக ஹெல உறுமய ஒத்துழைக்க மறுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டபடி ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவுடன் இந்த வாக்கெடுப்பு நடைபெற்றிருந்தால், அது எதிர்க்கட்சிகளின் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதாக அமைந்திருக்கும் எனவும் நம்பப்படுகிறது. (உ,க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

உங்களிடமே நம்பிக்கை வையுங்கள். ஒரு காலத்தில் நீங்கள் வேதகாலத்தைச் சேர்ந்த ரிஷிகளாக இருந்தீர்கள். இப்போது நீங்கள் வேறு வித வடிவம் தாங்கி வந்திருக்கிறீர்கள்.

சுவாமி விவேகானந்தர்

## மோட்டார் சைக்கிள் மாணவியை மோதியது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கன்னியர் மடம் பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மாணவியொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை இவ் விபத்து இடம்பெற்றது. போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த மாணவிமீதே மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இளைஞர் மோதியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் பிரஸ்தாப இளைஞனைக் கைது செய்து யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அவரை எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.(த-5)

## பட்டதாரிகள் நாளை செயலகம் முன் மறியல்

(யாழ்ப்பாணம்)

உயர் தேசிய கண்க்கியல், வர்த்தக, முகாமைத்துவப் பட்டதாரிகள் நாளை திங்கட்கிழமை யாழ்.செலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த காலங்களில் பட்டதாரி நியமனங்கள் வழங்கப்பட்ட போது உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் உள்வாங்கப்பட்டனர்.ஆனால் தற்போது இப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இதனைக் கண்டித்து நாளை திங்கட்கிழமை யாழ்.செயலகம் முன் மறியல் போராட்டம் நடத்தவுள்ளதாகப் பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை மேற்படி போராட்டம் குறித்து ஆராயும்முகமாக இன்றுகாலை 10 மணிக்கு யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது.(த)

## சமாசம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை சமாசத் தலைவர் நா.கணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-8)

## இன்று

(பொன்னாலை)

சங்கானை- பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதேச; ஊரகப் பேராளர்களுக்கான சங்கம நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழ்மை பி.ப.2.30 மணிக்கு வட்டுக்கோட்டை-இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச் சங்கம நிகழ்வில் சகல ஊரகங்களின பேராளர்கள்,மற்றும் பிரதேசத்தின் பேராளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கானைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.(த-49)

(பொன்னாலை)

யாழ்.மாவட்டத்தில் காணாமற் போனோர் பற்றிய விவரங்கள்,யாழ்.பொது அமைப்புக்களின் ஒன்றிய ஆதரவுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை பதிவு செய்யப்படவுள்ளது.

கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தால் மேறபடி ஒன்றிய ஆதரவுடன் நடைபெறும் இப்பதிவுகள் தென்மராட்சி டிறிபேக் கல்லூரியிலும் சங்கச் செயலாளர் சு.கமலநாயகியின் கச்சேரி-நல்லூர் வீதியிலுள்ள இல்லத்திலும் நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் காணாமற் போனோரின் பெற்றோர், உறவினர் அல்லது பாதுகாவலர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-49)

(பொன்னாலை)

யாழ்.மாவட்ட சமாதான நீதிபதிகள் சங்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் உள்ள யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது. (த-49)

(கல்வியங்காடு)

கோப்பாய் இருபாலை கிழக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளியின் விளையாட்டுப்போட்டி இன்று பி.ப.2 மணிக்கு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் கி.தங்கவடிவேல் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி வை.தியாகராசாவும், சிறப்பு விருந்தினராக கிராம சேவையாளர் எஸ்.தயாபரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.(உ-74)

# எமது உரிமைகளை வென்றெடுக்க பாராளுமன்றம் உகந்த இடமல்ல

## கஜேந்திரன் எம்.பி.விளக்கம்

(பொன்னாலை)

எமது தாயகப் பகுதியில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது.எம்மை நாமே ஆளுகின்ற ஒரு தன்னாட்சி அதிகார சபை ஏற்படுமானால் அவ்வாறான அபிவிருத்திகளைப் பூரணமாக நாம் மேற்கொள்ள முடியும்.

மேற்கண்டவாறு தமிழ்த் தேசியக் கூடடமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

நெல்லியடி முருகமூர்த்தி ஆலயக் கலியாண மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் 5ஆவது மாவட்டப் பேராளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்டச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து பேசிய கஜேந்திரன்,

தேசியத் தலைவரின் சிந்தனையில் உருவான இத் தேசிய எழுச்சிப் பேரவையானது, ஒரு சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பாகக் காணப்படுகின்றது. இந்தத் தேசிய எழுச்சிப் பேரவைச் சங்கமத்தில் அந்தந்தப் பிரதேசத்தினுடைய அபிவிருத்தி பற்றியும் ஆலோசிக்கப்படுகின்றது.

இராணுவத்தின் பிடியில் இருந்து மக்கள் விடுதலைப் பெற தேசிய எழுச்சிப் பேரவை உழைத்து வருகின்றது. கடந்த இரண்டரை வருடங்களாக நீடிக்கும் சமாதான காலத்தில் எந்தவித ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. நாம் பாராளுமன்றம் சென்று 3 மாதங்கள் முடிந்த நிலையிலும் எமது மக்களுக்காக எந்த விதமான செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியவில்லை.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நாங்கள் என்று சொல்லிக் கொண்டு ஒரு சிலர் பாராளுமன்றத்தில் பல குழப்பங்களை விளைவித்து வருகிறார்கள். பாராளுமன்றத்தின் ஊடாக நாம் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியாதென்பதையும் நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ளவிரும்புகின்றேன். இந்தச் சமாதான காலத்தில் இன்னுமொரு யுத்தத்தைத் தொடங்குவதற்கும், விடுதலைப் புலிகளிடையே திட்டமிட்ட முறையில் குழப்பங்களையேற்படுத்தி இராணுவப் புலனாய்வுத் துறையூடாக இந்த நடைமுறைகளைச் சாத்தியமாக்குவதற்கும் அரசு முனைகிறது.

மிகவும் குறுகிய காலத்திற்குள் இராணுவம் "எமது பகுதியில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும். புலிகளையழித்து யுத்தத்தை மேற்கொள்ளும் ஒரு நோக்குடனேயே இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

கடந்த காலத்தில் இராணுவத்தின் இரும்புச் சுவருக்குள் இருந்து கொண்டு பல்கலைக் கழக மாணவர்கள் குரல் கொடுத்து வந்ததன் விளைவாகவே இந்தச் சமாதானச் சூழல் மலர்ந்து வந்தது. இன்று இந்தச் சூழலைக் குழப்புவதற்கு இராணுவம் முயற்சிக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் இன்று பல கொலைச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை பெருமளவு பகுதி புலிகளின் வசம் உள்ளபடியால் இங்கு கொலைகள் குறைவாகவே இருக்கின்றன.

பாராளுமன்றத்தில் பொது மக்கள் மத்தியில் உள்ள பிரச்சினைகளை நாம் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. போராட்டம் என்பது அரசியல், அகிம்சை, ஆயுதமென விரிந்து செல்லும். நாம் எமது மக்களுக்காகவே குரல் கொடுப்போம்.

மிக மோசமான முறையில் யாழ்ப்பாணக் குடாநாடு அழிந்து போயுள்ளது. இது தேசிய எழுச்சிப் பேரவையூடாகவே கட்டியெழுப்பபட வேண்டும். எமது பாராளுமன்ற ஒதுக்கீடுகள் யாவும் இந்த எழுச்சிப் பேரவையிடமே வழங்கப்பட்டு-அவற்றினூடாகவே அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுமென்றார். (உ-49)

## அறநெறி வழிகாட்டல்

(மன்னார்)

மன்னார்- சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அரங்கில் 'சைவமும் வாழ்வும்' எனும் தொனிப்பொருளில் அகில இலங்கை இந்து மாமன்றமும் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியமும் இணைந்து நடத்தும் ஆன்மீக அறநெறிவழிகாட்டல் அரங்கம் நேற்றும் இன்றும் இடம் பெறுகின்றது.

இதில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அருளாசி வழங்கிவருகிறார். (உ)

## உ/த பரீட்சை....

களுக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தபாலில் சேர்க்கப்பட்டிருப்பதாக கல்வித் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டு மாணவர்கள் நேற்று பிற்பகல் வேளை இணையத்தளம் ஊடாக பெறுபேறுகளை அறிந்து கொண்டனர்.

இதன் அடிப்படையில் யாழ்.குடாநாட்டில் முன்னணிப் பாடசாலைகளுக்கு உயர் பெறுபேறுகள் கிடைத்திருப்பதாக தெரியவருகிறது.(இ)

## செஞ்சிலுவைச்....

பட்ட பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் சார்பில் தமிழீழ காவல் துறையின் பொறுப்பாளர் பா.நடேசன் உட்பட விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சார்பில் வன்னி வதிவிடப் பிரதிநிதி ராசல், புதுக்குடியிருப்பு வதிவிடப் பிரதிநிதி சேவியர் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ம)

## இ.தொ.கா...

மேலும் தெரிவித்திருப்பதாவது,

1978 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இன்றைய அரசியல் அமைப்பினால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏனைய கட்சிகளைவிட ஏழு லட்சம் வாக்குகளை மேலதிகமாகப் பெற்றபோதும் பாராளுமன்றத்தில் போதிய பெரும்பான்மைப் பலம் அற்றதாகவே உள்ளது.

இந்நிலையில் நாட்டில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக் காண்பதற்கும், மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யவும், நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டவும் புதியதொரு அரசியல் சட்டம் இன்று அவசியம் தேவையாகவுள்ளது என்று அமைச்சர் சி.வி.ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## மீண்டும் யுத்தத்திற்கு....

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. உட்பட சிங்கள பேரினவாதத் தலைவர்களின் அழுத்தங்கள் பேச்சுவார்த்தையைக் கேள்விக் குறியாககிவிட்ட நிலையில், ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் அவசர அவசரமாகக் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தின் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராகச் செயற்படுமாறு நோர்வேக்குத் இரண்டாவது தடவையாகக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் இக்கடிதத்திற்கு நோர்வே அரசு சாதகமான பதிலை அனுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஒஸ்லோ மேற்கொண்டு வருவதாக நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க, விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரமுள்ள நிர்வாக சபைக்குப் பதிலாக ஜனாதிபதி தலைமையிலான விசேட குழுவொன்று விடுதலைப் புலிகளுடன் இடைக்கால நிர்வாக சபைத் தொடர்பில் சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மாற்று யோசனை ஒன்றைத் தயாரித்து வருவதாகவும் அந்த யோசனைகள் அடங்கிய திட்டமொன்றையே ஜனாதிபதி அவசரமாக நோர்வேக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் ஜனாதிபதியுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.(ம-8)

## பொறுப்பாளர்....

அரசியல் வேலைத்திட்டங்கள் பல மணி நேரங்கள் தாமதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் அரசியல் பணிக்காக எட்டுப் பேருடன் சென்றதாகவும் இதனாலேயே அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அதன் பின் இராணுவ உயரதிகாரிகள் அனுமதி கிடைத்தபின் அவர்களைப் பிரயாணம் செய்ய அனுமதித்ததாகவும் தெரியவந்துள்ளது. (ம)

## ஏ.எல் பரீட்சை....

பாடசாலைப் பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபர் ஊடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தனியாகவும் விண்ணப்பங்களை அனுப்பமுடியும் என்றும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-க,61)

## வீடு விற்பனைக்கு

யாழ். நகரில் கச்சேரிக்கும் பொஸ்கோ பாடசாலைக்கும் அண்மையில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி : கே.திருநாவுக்கரசு 21, றக்கா லேன், சுண்டுக்குளி.

(8718)

## வெற்றிடங்கள்

27 வருடங்களாக இயந்திரத் தயாரிப்பில் முன்னோடியாக விளங்கும் எமது ஸ்தாபனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

1. உருக்கிணைப்பாளர்கள் (Arc Welders & Tig Welders)
2. பொருத்துநர்கள் (Fitters)
3. பப்ரிகேட்டர்ஸ் (Fabricators)
4. தகட்டு வேலையாள்கள் (Sheet Metal Workers)

மேற்படி வெற்றிடங்களுக்கு சுயமாகச் சிந்தித்துச் செயற்படும் ஆற்றலுள்ள, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அனுபவமுள்ள தரமாக வேலைசெய்வதில் ஆர்வமுள்ள தொழிலாளர்கள் தேவை.

**கல்வித் தகைமை :**

தேசிய தொழில் பயிலுநர் சபை சான்றிதழ்கள்/ தேசிய தொழில்நுட்பக் கல்லூரி சான்றிதழ்கள் பெற்றிருந்தால் நலம்.

**அனுபவம் :**

குறைந்தது 5 வருடங்கள்

திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

மேற்படி வெற்றிடங்களுக்கு நற்சாட்சி விபரம் கோரக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசத்துடன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக இயக்குநர்,
புறோமோட்டர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி லிமிடெட்
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

(C/399)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.